சாரணர்

வைரநாதம்

# யூனியன் கல்லூரி

## சாரணர் வைரவிழா

## மலர்





1998

★ உங்களுக்கு ஏற்ற வகையில்

மூக்குக் கண்ணாடிகளையும், பல் செட்டுகளையும்

தெரிவுசெய்திட

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# லாவண்யா

## பல், மூக்குகண்ணாடி அகம்

உரிமையாளர்:- டாக்டர் றெஜி சொலமன்

யாழ். வீதி,
நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

525, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வைரவர் கோவில் முன்பாக)

# LAVANJA

## Dental and Optical Service

Prop:- Dr. Regi Solaman

525, Hospital Road,
Jaffna.
(opp. Hospital Vyravar Kovil)

Yarl Road,
Nelliyady.
(Near Mahathma Theatre



சாரணியத்தின் தந்தை பேடன் பவல்.

★ உங்களுக்கு ஏற்ற வகையில்

மூக்குக் கண்ணாடிகளையும், பல் செட்டுகளையும்

தெரிவுசெய்திட...

[illegible]ம்

[illegible] வீதி, [illegible] வீதி,
நெல்லியடி. [illegible] யாழ்ப்பாணம்.
(மகாத்மா [illegible] அருகாமையில் [illegible] முன்பாக)

535, Hospital Road,
Jaffna.
opp. Hospital Vyravar Kovil

Yarl Road,
Nelliyady.
(Near Mahathma Theatre

# உள்ளே நுழையும் முன் ..............

நீண்ட காலப் பாரம்பரியம் கொண்டு மிளிர்ந்து நிற்கும் தெல்லியூர் யா / யூனியன் கல்லூரி 1936ம் ஆண்டில் தன்னகத்தே சாரணியத்தை ஆரம்பித்துக் கொண்டது. மாணவர் தனித்து கல்வியைப் பெறுவதில் மட்டும் நின்று விடாது பிறருக்குச் சேவை செய்வதும், அச்சேவையின் மூலம் தமக்கும் தம் கல்லூரித் தாய்க்கும் பெருமையும் ஆனந்தமும் சேர்க்கும் வகையில் சாரணிய இயக்கம் தொடக்கி வைக்கப்பட்டது. அன்றைய அதிபர் திரு லோட் அவர்கள் தம் கல்லூரி மாணவர்களை சமுதாயத்திற்குப் பயன்பாடு உள்ளவர்களாக்க வேண்டும் என்ற நன் நோக்குடன் ஆசிரியர் திரு வ. சுப்பிரமணியம் அவர்களது பொறுப்பின் கீழ் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து வைத்து கல்லூரித் தாய்க்கு பெருமை தேடித் தந்தார்.

இவ்வியக்கத்தின் மூலம் ஒவ்வொரு சாரணனையும் நம்பத் தகுந்தவனாய், பற்றுறுதி உடையவனாய், நட்பும் மரியாதையும் கொண்டவனாய், சகோதரனாய், தோழனாய், தைரியமுள்ளவனாய், ஒத்துழைப்பவனாய், சிந்தனை, சொல், செயலில் தூய்மையுடையவனாய், சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவனாய், மகிழ்ச்சியுள்ளவனாய் ஆக்குவதே. இந் நன்நோக்கில் ஆரம்பிக்கப் பெற்ற இவ்வியக்கம் தொடர்ந்து வந்த காலங்களில் வளர்ச்சி பெற்று அவ்வப்போது ஆங்காங்கே சேவைகள் பலவாற்றி, இன்று தனது அறுபது வருடப் பூர்த்தியைக் கொண்டாடுகின்றது. அதனை நினைவு கூரும் பொருட்டு "வைர நாதம்" எனும் இந்நூலை வெளியிட்டு வைப்பதில் கல்லூரி பேருவகை அடைகின்றது. இவ் வைர நாதம் பல விடயங்களையும் தன்னகத்தே தாங்கி வெளிவருகின்றது. இவற்றில் பெரும்பாலும் சாரண மாணவர்களது ஆக்கங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் சாரணர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டும், மேலும் சிறந்த ஆக்கங்களைத் தருவார்கள். ஆரம்ப காலத்தில் சாரண ஆசிரியராக இருந்த திருவாளர் வோட் என்பவரைத் தொடர்ந்து ஆசிரியர்கள் திரு வ. சுப்பிரமணியம், திரு த. இராஜசிங்கம், திரு க. குணசிங்கம், திரு இ. விஸ்வநாதன், திரு எஸ். மகேந்திரன், திரு எஸ். வைகுந்தநாதன், திரு வி. பாலசிங்கம், திரு கு. சீராளன், திரு வை. முருகதாஸ், திரு வி. ஜோன்சன் ஆகியோர் சாரணர் பணி திறம்பட நிகழ உதவியாற்றி வருகின்றனர். கல்லூரிச் சாரணர்கள் கிறீஸ், சிங்கப்பூர், இந்தியா, இலங்கை (சார்க்) ஜம்போறிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் அனுராதபுரத்தில் நடைபெற்ற மூன்றாவது தேசிய ஜம்போறி, குருணாகலில் நடைபெற்ற நான்காவது தேசிய ஜம்போறி, இறுதியாக நடைபெற்ற கண்டி பல்லேகலவில் நடைபெற்ற ஐந்தாவது தேசிய ஜம்போறி என்பவற்றிலும் கலந்து கொண்டு சிறப்பித்த அதே வேளை பாராட்டுக்கள் பலவும் பெற்றனர். அன்றைய அதிபர்கள் திரு ஐ. பீ. துரைரட்ணம், திரு கிருஸ்ணபிள்ளை ஆகியோர் கூடியளவு அக்கறை கொண்டு திறமை கொண்ட சாரண இயக்கத்தைக் கட்டியெழுப்ப உறுதுணையானார்கள்.

சாரணர்களுள் திருவாளர்கள் வி. பாலசிங்கம், எஸ். நவரட்ணம், எஸ். குணரட்ணம், எஸ். மகேந்திரம் ஆகியோர் இராணிச் சாரணர் விருதினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். மேலும் சி. சிவமோகன், சி. சிவகரன், எஸ். ஜெயச்சந்திரா ஆகியோர் ஜனாதிபதிச் சாரணர் விருது பெற்று சாரண வரலாற்றில் சாதனை படைத்தனர்.

எமது கல்லூரி மாணவிகளும் சாரணர்க்கு உதவியாக நல்வழிகாட்டிகளாகத் திகழ்கிறார்கள். அவர்கள் கல்லூரி நிகழ்ச்சிகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி எமக்குப் பெருமை தேடித் தருகிறார்கள்.

இச் சாதனைகள் இனி வருங்காலங்களிலும் நிலைநாட்டப்பட்டு கல்லூரிக்குப் பெருமை தேடித் தரும் வகையில் சாரண இயக்கம் அமையும் என்று கூறி சாரணர் வைர நாதத்தினுள் உங்கள் பார்வையைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

திரு E. K. V. ஜோன்சன் B. Sc.

*சாரணிய பொறுப்பாசிரியர்*

தெ
விழாவை
டற்ற ம
யும் நி
இங்கு
றனர்.
தட்ட
கண்மவ
ரத்தின

இ
1986
இழப்பு
எவர்
அகதிய
இதன்
தங்கள்
அனுப
இம்மா
சாரை
இவை.

மூவை
அதிபர்
வரும்
கவும்
வேறு

வட
திரு

# ஆசியுரை



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தனது சாரண இயக்கத்தின் வைர விழாவை கொண்டாடி, ஒரு நூலையும் மலர வைப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நிகழ்வையும், இவ்வாலயத்தையும் நினைத்ததும் இவ்வாலயத்தை வளர்த்த பல குரு தெய்வங்களும், இங்கு கற்று வளர்ந்த மாணவ மணிகளுமே எனது மனதில் நிறைகின்றனர். யாழ்ப்பாணப் பாடசாலைகளில் முன்தோன்றியதும், கிட்டத்தட்ட பத்தொன்பது தசாப்த சரித்திரமும் உடையது இது. இதை கண்மணிபோல் கட்டிக்காத்த அதிபர்கள் பலர். திரு. ஐ. பி. துரைரத்தினம், திரு. பாலசுந்தரம் போன்றோரை நாம் மறக்க முடியாது.

இதேவேளை முதல் இடம்பெயர்ந்த பெரிய கல்லூரியும் இதுவாகும். 1986 தொடக்கம் இன்றுவரை இக்கல்லூரிக்கு ஏற்பட்ட இடிபாடு, இழப்பு. அவலம் என்பவை கொடூரமானவை. இக்கல்லூரியை நேசித்த எவர் மனமும் கலங்காதுவிடாது. பெரும் மாடிகளில் கற்ற மாணவர் அகதியாகி, இடம்பெயர்ந்து ஓலைக் கொட்டில்களில் கற்கிறார்கள். இதன் பெற்றார்களும், பழைய மாணவர்களும் பெருமுயற்சி செய்து தங்கள் மாணவர் கல்வியை இழக்க விடாதும், பிள்ளைகள் பல்துறை அனுபவங்களைப் பெற வாய்ப்பாகவும் இராமநாதன் கல்லூரியிலே தளம் அமைத்துக் கொடுத்தார்கள். இம்மாணவர் விளையாட்டுக்களிலும் மிளிர்கின்றார்கள். கவின் கலைகளிலும் முன்நிற்கின்றார்கள். சாரணியத்திலும் அறுபது சாரணியினரைக் கொண்ட பேரணியினராகிறார்கள். பெருமைக்குரியவை இவை.

இவ்வேளை பெரும் நம்பிக்கையுடன் மனம் தளராது கட்டி வளர்த்த இப்பாடசாலை அதிபர்கள் மூவரை நான் மறக்க முடியாது. திரு. நா. கந்தசாமி, திரு. யெ. கமலநாதன், அடுத்து தற்போதைய அதிபர் திரு. சு. புண்ணியசீலன். இவர்களின் உயிரும், உடலும் இப்பாடசாலையேதான். முன்னைய இருவரும் கட்டிக்காத்து கொடுத்ததை திரு. சு. புண்ணியசீலன் தைரியமாகவும், துணிச்சலாகவும், துரிதமாகவும் காலத்துக்கு வேண்டிய அளவிற்கு வளர்த்து வருவது மெச்சக்கூடியது. இவரின் ஈடுபாட்டிற்கு இணை வேறு இல்லை. இவரின் தலைமையில் இப்பாடசாலை வளரும். எனது நம்பிக்கை இது.

சாரணீயம் வளரவேண்டிய காலம் இது. இதை உணர்ந்து செயற்படுவது போற்றக்கூடியதாகும்.

இம்மலரை வெளியிடும் குழுவினரைப் பாராட்டுகிறேன்.

'' வாழ்க சாரணீயம், வளர்க யூனியன் ''

வடக்கு கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.

**க. கந்தசாமி**
மாகாண கல்விப்பணிப்பாளர்,



# அதிபரின் ஆசிச்செய்தி

கல்விச்சுடரை எங்கும் பரவச்செய்து பழம்பெரும் பெருமையுடன் தலை நிமிர்ந்து நின்று, வீறு நடை போட்டு வரும் யூனியன் மாதாவின் சாரணிய மைந்தர் வைரவிழாக் காணும் இந்நாளில் ஆசிகள் நல்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன். தன்னிடத்தே வந்த சிறார் தம்மை தனக்கென வாழப் பிறர்க்குரியராக்கும் பக்குவம் பல வழங்கும் சாரணர் இயக்கம் என்ற அமைப்பை 1938ம் ஆண்டில் உருவாக்கிய பெருமை யூனியன் மாதாவிற்கேயுரியது. மனிதனைப் புனிதனாக்கும் பண்புகளை சிறு உள்ளங்களில் வளர்த்து, சமூகத்துடன் ஒன்றிணைக்கும் பாரிய பணியை இவ்வமைப்பு ஆற்றி வருகின்ற தென்றால் அது மிகையல்ல.

யூனியன் மாதாவின் அன்றைய நிர்வாகி வோட் அவர்களால் 1938 ம் ஆண்டில் ஆரம்பித்துவைக் கப்பட்ட இவ்வமைப்பு அவர்தம் பின் வந்தோரால் வளர்க்கப்பட்டு இன்று பெருவிருட்சமாகிய சிறப்பைப் பெற்றுள்ளது. பொதுநலம் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி வாழும் இந்நாளில் இவ்வியக்கம் தன்னலமற்ற, பிறர்க்குதவும் வகையில் மாணவர்களை உருவாக்கி வருவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. இடம்பெயர்ந்ததற்குப் பின் மீளமைக்கப்பட்ட எமது சாரண அணி மாவட்டத்தில் பல சாதனைகளைச்செய்து முதலாம் இடம் பெற்றமை மகிழ்ச்சியூட்டுகிறது. ''ஒருமுறை சாரணனாபவன் என்று சாரணன்'' ஆதலால் மாணவர் ஒவ்வொருவரும் இவ்வமைப்பில் என்றும் தம்மை இணைத்து எதிர்காலத்தில் சிறப்புகள் பெற்ற உன்னத மனிதர்களாக வாழவும், இவ்வமைப்பு வைர விழாவை மட்டுமன்றி, இனிவரும் காலங்களிலும் சேவைகளும் சாதனைகளும் பலவாற்றி, தமக்கும் கல்லூரித் தாய்க்கும் சமூகத்துக்கும் என்றென்றும் பணிசெய்து வாழ்ந்திட ஆசிகள் பல கூறுகின்றோம்.

யூனியன்கல்லூரி,
தெல்லிப்பளை.

**சு. புண்ணியசீலன்**
அதிபர்

# MESSAGE

*I am very pleased to send this message on the occasion when the Scout troop of Jaffna / Union College, Tellippalai is celebrating its 60th Jubilee.*

*Together with the other troops in the Jaffna Peninsula, the Union College Scout troop must be commended for keeping the Scout Movement alive and functioning in the midst of all the difficulties that the region is faced with. I have been impressed by the zeal of our young Scouts and Scout leaders of Jaffna as demonstrated by the participation of substantial numbers of Scouts in the last 2 Jamborees.*

*I gather that the troop at Union College was first established in 1937 during the time of the American Mission and was finally registered in 1950. Since then it has remained very active and today it boasts of a strength of 60 members. While I send my warmest greetings and best wishes on this memorable occasion of the 60th Jubilee celebrations, I hope that this troop will make a major contribution towards making Scouting a principal force for the development of the youth of Jaffna.*

K. H. Camillus Fernando
Chief Commissioner

65/9 Sir Chitampalam A Gardinar Mawatha,
Colombo – 02

பலசரக்குப் பொருட்கள், கிருமிநாசினிகள்
உரவகைகள் மற்றும்
ஆனந்தம் தயாரிப்புக்கள்
இவை அனைத்தையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# ஸ்ரீ சச்சிதானந்தா என்ரபிறைஸ்

ஆனந்தநகர்,
கைதடி வடக்கு,
கைதடி.

# வாழ்த்துகிறோம்

அளவெட்டி - மல்லாகம்
பல நோக்கு கூட்டுறவுச்
சங்கம்.
மல்லாகம்

தெல்லிப்பளை
பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்.
தெல்லிப்பளை.

# ஆசியுரை

யாழ் / தெல்லிப்பளை ஜுனியன் கல்லூரி தனது சாரணர் குழுவின் வைர விழாவைக் கொண்டாடுகின்றது. அதே நேரம் அவ்விழா தொடர்பான சிறப்பு நூல் வெளியீடும் நடைபெறுவதை எண்ணி பெருமையும் மகிழ்வும் அடைகிறேன்.

சாரண இயக்கம் பேடன்பவுல் பிரபுவினால் மேற்குலகில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எமது பிரதேசத்தில் இந்த இயக்கத்தை அதன் மகத்துவத்தை அரை நூற்றாண்டுக்கு முன்னரே உணர்ந்து செயற்பட்டது பெரிய விடயமாகும்.

தெல்லிப்பழை ஜுனியன் கல்லூரியில் 1937 ஆம் ஆண்டு அந்நேரத்தில் அதிபராய் கடமையாற்றிய "வோட்" என்பவரால் தொடக்கி வைத்த சாரணிய இயக்கம் நன்றாக வளர்ந்து கல்லூரிக்கு நற்பெயரைத் தேடித் தந்துள்ளது. பல வெளிநாட்டு ஜம்போறிகளில் கலந்து சிறப்புப் பெற்றதுடன் பல ராணிச் சாரணர்களையும் ஜனாதிபதி சாரணர்களையும் உருவாக்கியுள்ளது குறிப்பிடத் தக்கது. 1998 இல் கண்டியில் நடைபெற்ற 5 வது ஜம்போறியில் பல சிரமங்களுக்கு மத்தியில் கலந்து கொண்டது சிறப்புடையதாகும்.

கடந்த பல ஆண்டுகள் காங்கேசன் மாவட்டத்தில் இக்குழு முதன்மை பெற்று விளங்குவதற்கு, இக்கல்லூரியில் சாரண ஆசிரியராக இருந்து காங்கேசன் மாவட்ட 1 வது சாரண மாவட்ட ஆணையாளராகக் கடமையாற்றிய திரு விஸ்வநாதன் அவர்களும், கல்லூரி அதிபர் திரு சு. புண்ணியசீலன் அவர்களும்தான் காரணமென்றால் அது மிகையாகாது.

இவ் 60வது நிறைவான வைரவிழாவில் 60 இற்கு மேற்பட்ட சாரணர்களுடன் கலந்து சிறப்புற இருக்கும் இச் சாரணக் குழு எதிர்காலத்திலும் சிறப்புகள் பெற்று இயங்க என் இதயம் கலந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

*க. சண்முகநாதன்,*
*அரசாங்க அதிபர்,*
*யாழ் மாவட்டம்.*

# வாழ்த்துரை

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிச் சாரணர் குழுவின் 60வது ஆண்டு நிறைவினையிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு என வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யூனியன் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர் அமரர் I. P. துரைரத்தினம் அவர்களது காலத்தில் கல்லூரிச் சாரணியம் குறிப்பிடத் தக்க வளர்ச்சி பெற்றது என்றால் மிகையாகாது. அவர் தம் அயராப் பணியாலும், முன்னெடுப்பாலும் அமரர் இ. விசுவநாதன் அவர்களால் கல்லூரிச் சாரணியம் பெரு வளர்ச்சியடைந்தது. 1980 ஆம் ஆண்டு யூனியன் கல்லூரியிலேயே யாழ் மாவட்டச் சாரணர்கள் அனைவரும் இறுதியாக ஒன்று கூடிய பாசறை விழாவும் இடம்பெற்றன. 1980 ஆம் ஆண்டு யாழ் மாவட்டச் சாரணர் அமைப்பு நான்கு சாரண மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுது காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் 1 வது மாவட்ட சாரண ஆணையாளர் ஆக திரு இ. விசுவநாதன் நியமனம் பெற்றமை இப்பாடசாலைச் சாரணிய வரலாற்றில் பெருமைக்குரிய விடயமாகும்.

இப்பாடசாலைச் சாரணர் குழு கணிசமான அளவு ஜனாதிபதிச் சாரணர்களையும் முதலாம் வகுப்புச் சாரணர்களையும் உருவாக்கியதுடன் இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சாரணர் ஜம்போறிகளிலும் இப்பாடசாலையைச் சேர்ந்த மூன்று சாரணர்கள் கலந்து கொண்டமை எமது மாவட்டத்திற்கும் யாழ் குடா நாட்டிற்கும், ஏன் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பெருமைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக யூனியன் கல்லூரிச் சாரணர் குழு எமது மாவட்ட நிகழ்வுகள் அனைத்திலும் பங்குபற்றும் பங்களிப்பும், போட்டிகள் பல 1ம் இடங்களைத் தனதாக்கிக் கொள்ளும் ஆற்றலும் உடையது ஆகும்.

இவ்வாறான எமது மாவட்டத்தின் சிறந்த சாரணர் குழுக்களில் ஒன்றான யூனியன் கல்லூரிச் சாரணர் குழுவின் வைர விழாவினை முன்னெடுத்துச் செயற்படும் அதிபர் திரு. ம. புண்ணியசீலன், சாரணத் தலைவர் திரு எஸ். முருகதாஸ், சாரணர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன், இக்கல்லூரியின் சாரணியம் பல்லாண்டு காலம் பேடன் பவலின் அபிலாசைக்கு ஏற்ப சமுதாயத்திற்கு நற்பணியாற்றி நல்லதோர் வருங்காலச் சமுதாயத்தை ஆளுமையடைந்த தலைவர்களை உருவாக்க தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என வேண்டி, வாழ்த்தி எல்லாம் வல்ல இறை அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.

*ந. சௌந்தரராஜன்*
*மாவட்ட சாரண ஆணையாளர்*
*காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம்*

# ஆசிச் செய்தி

பேடன் பவல் பிரபுவால் வித்திடப்பட்ட சாரணியம் பல தசாப்தங்களை வெற்றியுடன் முன்னெடுத்து பாரிய விருட்சமாக பல விழுதுகளை ஊன்றி வளர்ந்துள்ளது. மதம், மொழி, சாகியம், நாடு, தேசம் ஆகிய நோக்குகளில் சமத்துவ நிலையுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்று தாரக மந்திரங்களை முதன்மைப்படுத்தி உலகோர் அனைவரும் சகோதரர் என்னும் மெய்யியலை நெறிப்படுத்தி பத்துக் கட்டளைகளை தன்னணியாக இணைத்து புனிதமான இவ்வியக்கம் மேலும் பல நூறு ஆண்டுகள் பல்கிப் பெருகி வையத்துள் வாழ்வாங்கு மானிடம் வாழ தொண்டு புரிய வேண்டுமென்பதே "என் பேரவா".

இத்துணை சிறப்புடைய இவ்வியக்கம் இப்பாடசாலையில் 1936 இல் அப்போதைய அதிபர் வோட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 60 வருடங்களாக சிறப்புடன் முதன்மை பெற்று விளங்குவதும், இவ்வணியில் தம்மை இணைத்த சாரணர்களது வாழ்வு பொலிவுற்று விளங்குவதும் அவர்கள் சார்ந்த சமூகம் மேன்மையுற்றிருப்பதும் பெருமைக்குரிய தொன்றே. இவற்றை வழி நடத்திச் சென்ற, செல்கின்ற அதிபர்கள், சாரணராசிரியர்கள், பாடசாலைச் சமூகம் மற்றும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் அனைவருக்கும் இவ் சாரணர் "வைர விழா" நடைபெறும் திரு நாளில் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வி. இராசையா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

வலயக் கல்வித் திணைக்களம்,
வலயம் வலிகாமம்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

# சாரணியம் மேன்மேலும் வளர்க !

# வைரவிழா நிறைவு பெறுக !

நூற்றெண்பது ஆண்டுகட்கு மேலான பழம் பெருமையுடையது யூனியன் கல்லூரி கிறீத்தவ மிசனறிமாரால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி தன் பெயருக்கேற்பச் செந்தமிழையும் ஆங்கிலத்தையும் ஒருசேர வளர்த்து வருகிறது. இடருற்று இடம்பெயர்ந்த போதும் இக் கல்லூரி கிடைக்கும் வளங்களை இருக்கும் வளங்களைக் கொண்டு கல்வி, கலைத் துறைகளைக் கண்ணெனக் கருதி மேம்படுத்தி வருகின்றது. சாரணியத் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. சாரணியத் துறையிலும் மேம்பட்டுள்ள இக்கல்லூரி வெளிநாட்டு ஜம்போறியிலும், தேசிய ஜம்போறியிலும் பங்கு பற்றிய பெருமையுடையது. ராணிச் சாரணர்களையும், ஜனாதிபதிச் சாரணர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இக் கல்லூரி இவ்வாண்டு சாரணியத் துறையிலான தனது வளர்ச்சியை அறுபதுக்கும் மேற்பட்ட சாரணர்களுடன் அறுபதாண்டு விழாவாக வைர விழாவாக வெளிப்படுத்திப் பெருமிதமாகக் கொண்டாடவிருப்பது பொருத்தமானது. வரவேற்கத் தக்கது. பாராட்டுக்குரியது. எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கின்ற சேவை செய்வதிலே ஆனந்தம் அனுபவிக்கின்ற சாரணியின் வைர விழா இனிதே நிறைவுறவும் மென்மேலும் வளர்ச்சியுறவும் எனது இதயம் நிறைந்த இனிய வாழ்த்துக்கள்.

திருமதி ப. திலகநாயகம்,
பிரதேசச் செயலர்,
வலி வடக்கு.

# பழைய மாணவர் சங்கத் தலைவரின் ஆசியுரை

யாழ் யூனியன் கல்லூரி சாரணர் குழுவின் வைர விழா நிகழ்வதையிட்டும், இவ்விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னோர்களின் முயற்சிகளைக் கண்ணுற்ற அமெரிக்க மிசன் சங்கத்தைச் சேர்ந்த வண. டானியல் பூவர் வண. எட்வேட் வாறென் ஆகியோர் 15.10.1816 ல் தெல்லிப்பளையில் யூனியன் கல்லூரியை ஸ்தாபித்தனர். 1937 ம் ஆண்டு அமெரிக்க மிசனரியின் நிர்வாகத்தில் இருந்த போது அப்போதைய அதிபர் திரு வோட் அவர்கள் சாரணிய அமைப்பை உருவாக்கினார். அவரது ஞாபகார்த்தமாக பாடசாலையில் உள்ள இல்லங்களில் ஒரு இல்லத்திற்கு வோட் இல்லம் எனப் பெயரிடப்பட்டது. எமது காலப்பகுதியில் சாரணர் குழு பொறுப்பாசிரியர்களாக அமரராகி விட்ட திரு கே. குணசிங்கம், திரு விஸ்வநாதன் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டனர். திரு விஸ்வநாதன் அவர்கள் முதலாவது சாரண மாவட்ட ஆணையாளராக இருந்தமை பாடசாலைக்கும் எமக்கும் பெருமையைத் தந்துள்ளது.

சாதாரண சூழ்நிலை இருந்த காலத்தில் 1983 வரை யாழ் மாவட்ட சாரணர் பாசறையில் வருடாவருடம் கலந்து சிறப்பித்ததோடு பல பரிசில்களையும் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். இப்போதும் கூட எமது சாரண மாணவர்கள் சிறுசிறு வேலைகளைச் செய்து சிறு கூலி பெற்று சாரணர் குழு நித்தியத்தை வளர்த்து வருகின்றனர். 1962 ல் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற ஒரு கிழமை வரையான சாரணர் பாசறையில் எமது சங்க உபதலைவர் திரு எஸ். ஆர். யேசுபாலன் அவர்களும் கலந்து கொண்டிருந்தார் என்பதை கூறுவதில் பெருமைப்படுகின்றோம். 1963 ஆம் ஆண்டில் அகில உலக ரீதியில் கிறீஸ் நாட்டில் நடைபெற்ற சாரணர் பாசறையில் எமது பாடசாலையின் அப்போதைய மாணவர்கள் திரு சி. இந்திரஜித், திரு செ. சத்தியேந்திரா ஆகிய இருவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தற்போதைய யாழ் மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவி ஆணையாளர் ஆகிய திரு கே. அருந்தவராஜா அவர்களும் எமது பாடசாலையின் சாரணர் குழு அங்கத்தவராக இருந்துள்ளார் எனக் கூறுவதில் பெருமைப்படுகின்றோம். கடந்த வருடங்களில் எமது சாரணர் குழு காங்கேசன் மாவட்டத்தில் முதன்மை பெற்று விளங்குவதற்கு தற்போதைய அதிபர் திரு சு. புண்ணியசீலன் அவர்களின் அயராத உழைப்பே காரணமாகும். எமது பாடசாலையின் பல மாணவர்கள் முன்பு ராணி சாரணர்களாகவும் இப்போது ஜனாதிபதி சாரணர்களாகவும் உருவாகியுள்ளனர். 1998ல் நடைபெற்ற 5 வது தேசிய ஜம்போரிக்கு பல சிரமத்தின் மத்தியில் 7 சாரண மாணவர்களும் 2 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். தற்போது 60 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் போது 60 க்கு மேற்பட்ட சாரணர் மாணவர்கள் பாடசாலை சாரணர் குழுவில் இணைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யூனியன் கல்லூரி சாரணர் குழு தனது நூறாவது ஆண்டு நிறைவை பல சாதனைகள் படைத்த நிலையில் கொண்டாட வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

S. விக்னராசா,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

# கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவரின் ஆசியுரை

1937ம் ஆண்டு எமது கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட சாரணிய அமைப்பு 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து "வைரவிழா" கொண்டாடுகிறது என்பதையிட்டு நாம் பெரு மகிழ்வடைகின்றோம். தடைகள் பல தாண்டி வீறு நடைபோடும் எமது கல்லூரிச் சாரணிய அமைப்பு இன்று வரை பல இராணிச் சாரணர்களையும், ஜனாதிபதிச் சாரணர்களையும் உருவாக்கித் தந்தது மட்டுமல்லாமல் தேசிய மட்டத்திலும், வெளிநாடுகளிலும் இடம்பெற்ற ஜம்போறிகளிலும் பங்குபற்றியது எமது கல்லூரிச் சாரணிய அமைப்பின் திறமைக்குச் சான்று பகர்வனவாகும். மேலும் காங்கேசன் மாவட்ட முதலாவது சாரண மாவட்ட ஆணையாளர், எமது கல்லூரியின் நீண்ட கால சாரணர் ஆசிரியர் என்பதைப் பெருமையுடன் நினைவு கூருகின்றோம். எமது கல்லூரியின் சாரண அமைப்பினால் உருவாக்கப்பட்ட எத்தனையோ பழைய மாணவர்கள் இன்றும் அரச நிறுவனங்களிலும், தனியார் துறையிலும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், பிரபலமாகவும், புகழுடனும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது கண்கூடு. இதற்கெல்லாம் காரணம் எமது கல்லூரிச் சாரணிய அமைப்பினால் இளமையில் இவர்களுக்கு ஊட்டப்பட்ட கடமையுணர்வு, தியாக சிந்தனை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பிரதி பலனற்ற உதவும் தன்மை, எதற்கும் தயாராயிரு போன்ற பல்வேறு அம்சங்களாகும். 60 ஆண்டுகளாக எமது கல்லூரிச் சாரணிய அமைப்பைக் கட்டுப்பாட்டுடன் திறமையாக வழிநடத்துவதற்கு அயராது உழைத்தவர்கள் எமது அதிபரும், சாரண ஆசிரியர்களுமே ஆகும். அண்மைக் காலங்களில் காங்கேசன் மாவட்டத்தில் எமது கல்லூரி முதன்மையாக விளங்குவதை அறிந்து மகிழ்வடைவதோடு தற்போதைய அதிபர் திரு சு. புண்ணியசீலன் அவர்களையும், சாரண ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். 60 இற்கு மேற்பட்ட சாரணர்களுடன் 60ம் ஆண்டு நிறைவு கொண்டாடும் எமது கல்லூரிச் சாரணிய அமைப்பு தொடர்ந்தும் பல நற் சாரணர்களை உருவாக்கி அவர்களைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று விரும்பி நிற்கும் நாம் எம்மாலான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளோம் என்பதோடு இச் சாரணர் வைர விழாவும் நூல் வெளியீடும் சிறப்பாக அமைய வேண்டும் என்று எமது மனமார்ந்த நல்லாசிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

*ஆக்கம் : திருபாலேந்திரா*
*தலைவர்*
*கொழும்பு பழைய மாணவர் சங்கம்*

# வாழ்த்துரை

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினர் சாரணர் குழுவின் வைரவிழாவைக் கொண்டாடுவது குறித்து மிக மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களின் தூய சிந்தனையை வளர்ப்பதற்கு சாரணியம் சிறந்த வழியைக் காட்டுகிறது. நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் அனைத்தையும் மகத்தான வழியில் உணர்த்தி நிற்பது சாரணியமே. சிறு வயது தொடக்கம் சாரணிய வழியைப் பின்பற்றிய மாணவர்களே நாட்டில் பெருந் தொண்டர்களாக விளங்குகிறார்கள். இது ஒரு புனிதமான வழி. கட்டுப்பாட்டையும், கடமையையும், கண்ணியத்தையும் உணர்த்தி நிற்கும் ஒரு தூய வழியும் இதுவேயாகும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலே சாரணீயத் தொண்டர்களின் தன்னலங் கருதாப் பணியை பல ஆண்டுகளாக நான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்திருக்கிறேன். இன்று இச் சாரணீயத்தின் வைரவிழா கொண்டாடுவது குறித்து எனது நல்லாசியை வழங்க வேண்டிய கடமை எனக்கு உண்டு. கடந்த காலங்களிலும் இன்றைய சூழ்நிலையிலும் மன உறுதியோடு சாரணியத்தை வளர்த்து வருபவர்கள் இவர்கள். இதனால் கல்லூரி வளாகத்திலும் எமது மண்ணின் பல பாகங்களிலும் இவர்களின் சாரணீயத் தொண்டு நற்பயனை விளைவித்திருக்கிறது. ஆகவே வைரவிழாக் காணும் நேரத்தில் சாரணியத் தொண்டு மேலோங்கி நிற்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி*<br>
*சமாதான நீதிபதி*<br>
*தலைவர்*<br>
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*<br>
*தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா*

# தெல்லிப்பளை யூனியன் கல்லூரிச் சாரணர் வைரவிழா மேன்மையுடன் நிறைவெய்தவும், சாரணிய இலக்கினையும் வளர்ச்சியையும் அடைய வாழ்த்துச் செய்தி

யூனியன் கல்லூரி சாரணர் இயக்கத்தினை ஆரம்பித்து 60 வது ஆண்டு நிறைவினையிட்டு வெளியிடும் வைரவிழாச் சிறப்பு மலருக்கு சாரணியத்தில் பற்றுறுதியுடையவன் என்ற முறையிலும், இக் கல்லூரியின் சாரணிய செயற்பாட்டுடனும் தொடர்பு உள்ளவன் என்ற உரிமையுடனும் இவ் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற அகமகிழ்வடைகின்றேன்.

தனக்கென ஓர் தனித்துவத்தை அமரர் ஐ. பி. துரைரத்தினம் அதிபர் அவர்கள் காலத்தில் கொண்டு திகழ்ந்த இக்கல்லூரி சாரணியமானது திரு சு. புண்ணியசீலன் அதிபர் அவர்கள் காலத்தில் மீண்டும் தனித்துவம் பெறுவது பாராட்டுக்குரியதும், தகைமையுடையதும் ஆகும். இவர் பளை மத்திய கல்லூரியில் சாரணியத்தை ஓர் ஸ்திர நிலைக்கு உருவாக்கிய அனுபவமும், சாரணிய கோட்பாட்டிற்குரிய தகைமையும் கொண்டவர்.

இக்கல்லூரியின் சாரணிய வரலாற்றில் எமது மாவட்ட மட்டத்தின் வரலாற்றில் இடம்பெற வேண்டிய பல நிகழ்வுகள் உள. யாழ் மாவட்டத்தின் சாரணிய வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு நான்கு மாவட்டங்களாகப் பிரிப்பதற்கு அமரர் கேமபால இரத்தினசூரியா முன்னால் பிரதம ஆணையாளர் அவர்களால் 1980 இல் மாவட்ட சாரணர் பாசறை விழா இக் கல்லூரியில் நடைபெற்ற போது கால்கோள் இடப்பட்டது. காங்கேசன்துறை மாவட்ட முதலாவது ஆணையாளரான அமரர் இ. விசுவநாதன் அவர்களை இக்கல்லூரி தந்துதவியது. 1987ல் நடைபெற்ற ஆசிய பசுபிக் ஜம்போறிக்கு திரு இராகவன், செ. ஜோதிக்குமார் ஆகியோரையும், 1989ல் நடைபெற்ற சிங்கப்பூர் ஜம்போறிக்கு திரு ஜெயக்குமாரையும் எமது மாவட்டத்தின் சார்பில் கலந்து கொள்ளப் பங்களிப்புச் செய்து மாவட்டத்திற்கு பெருமை தேடித் தந்தது. மாவட்ட மட்டத்திலும் முன்னணியில் திகழும் ஓர் சாரணர் குழுவைக் கொண்ட கல்லூரியாகும்.

இவ்வித பெருமைகள் பல கொண்ட இக்கல்லூரி சாரணர் குழு தனது 60வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ் வேளையில் மாவட்ட ஆணையாளர் நாடாவிற்கான பூரணத்துவ வழிகாட்டல்களைக் கொண்ட பயனுள்ள ஆக்கங்கள் கொண்ட ஓர் விசேட சிறப்பு மலரை வெளியிடுவது மிகவும் பாராட்டிற்குரியது.

இச் சாரணர் குழு மென்மேலும் சிறந்த தலைமைத்துவமும், கடமை, கண்ணியம், சகிப்புத் தன்மை, சேவை மனப்பாங்கு கொண்ட ஓர் சிறந்த குழுவாக திகழ எனது ஆசிகளும், பங்களிப்பும் என்றும் உண்டு. இப்பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், சாரணர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது கடப்பாட்டுடன் கூடிய நன்றிகள்.

*வளர்க சாரணியம் ! யூனியன் கல்லூரியில் ! பவள விழாக் காண !*

*த. நா. போஜன் - ச.நீ.,*
*(பயிற்றுநர் தலைவர்)*
*செயற்குழுத் தலைவர்*
*காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம்.*

# வாழ்த்துகின்றோம் நாமிங்கே

ஆழிசூழ் இலங்கை தனில்
வடபாலமைந்த யாழ்நகரதனில்
சோலைகள் நிறைந்த தெல்லிமாநகரில்
தன்னிகரில்லா யூனியன் அன்னைதன்
சாரணர், மணிவிழாக் காணும் நாளில்
வாழ்த்துக்கள் பல கூறி
வார்த்தைகள் சில கூறுகின்றோம்.

இரவும் பகலும் எந்நாளும்
சிரமமெடுத்தே செய்யும் சேவையாலும்
பலருடன் கூடிப் பலவிதம் பழகிப்
பாங்குடன் இன்சொல் பகிர்ந்திடும்
சலித்திடா நும் சேவை
தொடர்ந்து செய் முயற்சியால்
ஏற்றம் பெற்றே என்றும் வாழ
வாழ்த்துகின்றோம் நாமிங்கே

நாடு போற்ற நற்செயல்
பற்பல புரிந்து பாராட்டுகள்
பெற்றிடவும்
சாரணர் நுமக்கு
ஆசிரியர் எமது
ஆசிகளும்,
வாழ்த்துக்களும்

ஆசிரியர் குழாம்
யா / யூனியன் கல்லூரி

# வைரவிழாக் கீதம்

சாரணியக் கொடியை வணங்குவோம் - உலக
சமத்துவத்தின் சின்னமென ஏற்றுவோம்
தாரணியில் சத்தியத்தைப் பேணுவோம் - எங்கள்
தர்மம் காக்கும் இக்கொடியை வாழ்த்திப் போற்றுவோம்.

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வளர்வோம்
கருணை மிக்க சகோதர உலகம் படைப்போம்
மடமை, அச்சம், தயக்கமதை இல்லா தொழிப்போம்
மனிதம் வாழ வேண்டியதை மதித்து முன்னெடுப்போம்.

உறுதியுடன் சேவையாற்றி உலகை ஆளுவோம்
உத்தமராம் பேடன்பவல் பிரபு வழி செல்வோம்
பொறுமையுடன் சாரணிய வாழ்வை நாட்டுவோம்
பீடு பெறக் காருண்யச் சிந்தையை வளர்ப்போம்.

சமுதாய விழுமியங்களின் தேவை உணர்வோம்
சரிநிகரென வளம் பெருகும் சரித்திரம் படைப்போம்
அமுதான உறுதிமொழி ஏற்று நடப்போம்
அர்த்தமுள்ள வைர விழாச் சாதனை வளர்ப்போம்.

ஆக்கம் :
கே. எஸ். சிவஞானராஜா

# சாரணர் இயக்கம்

பிறர் நலம் கருதி பணியாற்றும் சமூக சேவை இயக்கங்களில் சாரணர் இயக்கம் தலை சிறந்தது. பிறருக்கு உதவி செய்தல், எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருத்தல், பெரியோருக்குக் கீழ்ப்படிதல் ஆதியாம் நற்பண்புகளை வளர்ப்பதற்கு இவ்வியக்கம் பெரிதும் உதவுகிறது.

'எதற்கும் தயாராயிரு' என்னும் இலட்சியத்துடன் செயற்படும் இவ்வியக்கம் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் சிறப்புறச் சேவையாற்றுகிறது. சேர் றொபேட்ஸ்டீவின்சன் சிமித் பேடன் பவுல் என்னும் ஆங்கிலேயரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கமானது சாதி, மத, இன பேதமின்றி மக்களுக்குத் தொண்டாற்றுகின்றது. சாரணர்கள் உண்மை பேசுபவர்களாகவும், கீழ்ப்படிவுள்ளவர்களாகவும் பிற உயிர்களிடத்து அன்புடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சாரணர் தமக்குரிய சீருடையினை அணிந்து சின்னங்களைச் சூடியிருப்பர். அவர் பிறருக்கு வணக்கம் செய்யும் பொழுது தங்கள் வலக்கைப் பெரு விரலையும் சிறு விரலையும் மடக்கிக் கொண்டு ஏனைய மூன்று விரல்களாலும் வணக்கம் செய்வார்கள். சாரணன் ஒருவன் மற்றொரு சாரணரைச் சந்திக்கும் போது இடது கை குலுக்குதல் மூலம் மரியாதை செலுத்துவான்.

சாரணர் இயக்கத்தில் சாரணர் ஒருவர் சேர்ந்து கொள்ளும் போது மூன்று உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளல் வேண்டும். நான் கடவுளுக்கும் தாய் நாட்டிற்கும் என்னால் இயன்ற கடமையைச் செய்வேன் என்றும், எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாய் இருப்பேன் என்றும் சாரணர் இயக்கத்திற்குரிய சட்டங்களுக்கு அடங்கி நடப்பேன் என்றும் அவர்கள் உறுதி மொழி பகருதல் வேண்டும். இவ்வுறுதி மொழிகளை என்றும் நினைவூட்டும் வகையிலே சாரணர்கள் தமது வணக்கத்தை மூன்று விரல்களினாலும் செலுத்துகின்றார்கள். மக்கள் பெருந்திரளாக கூடும் வைபவங்களிலும் ஆலய உற்சவங்களிலும், மற்றும் பொது நிகழ்ச்சிகளிலும் சாரணர் சேவை ஆற்றுவதை நாம் காண்கின்றோம். பிறர் நலம் பேணுதல், ஆபத்துக் காலத்தில் உதவி அளித்தல் ஆகியன சாரணர்களின் தலையாய பணிகளாகும். இவர்கள் முதலுதவி அளித்தல், நீந்துதல் போன்றவற்றில் தேர்ச்சியுடையவர்களாகவும் இருத்தல் அவசியம்.

நமது நாட்டில் உள்ள பாடசாலைகள் பலவற்றில் சாரணர் இயக்கம் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. ஏராளமான மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்துள்ளனர். உலக நாடுகள் பலவற்றில் நிகழ்ந்த சாரணர் விழாக்களில் நமது நாட்டுச் சாரணர்கள் பங்கு கொண்டு தமக்கும் நாட்டுக்கும் பெருமை தேடியுள்ளனர். நற்பிரஜைகளை உருவாக்கும் சாரணர் இயக்கத்தில் சேர்வதன் மூலம் நாம் பிறருக்கு உதவி செய்பவர்களாக, நல்லவர்களாக, வல்லவர்களாக வாழ முடியும்.

**ஆக்கம் : செல்வன் க. மதுசூதனன்**
**ஆண்டு 6**

# சாரணியத்தின் தலைமகன் பேடன் பவல் பிரபு அவர்கள்

இன்றும் சாரணியம் உலகிலே பரந்து விரிந்ததோர் இயக்கமாக விளங்குகிறது. சுமார் 153 தேசிய சாரணர் சங்கங்களைச் சேர்ந்த 18 மில்லியனுக்கு மேற்பட்ட சாரணர்கள் தமக்குரிய வேலைகளைத் திட்டமிட்டுத் திறம்பட ஆற்றுகின்றனர். உலகச் சாரணர் சம்மேளனமும், சர்வதேச சாரணர் நடவடிக்கைக் குழுவும் இவர்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வருகின்றன. நம்பகத் தன்மையும் விசுவாசமும் பற்றுறுதியும் கொண்ட சாரணர்கள் உலக சமுதாயத்திற்கு சிறந்த சேவையை ஆற்றி வருகின்றன. இத்தகைய மாபெரும் இயக்கத்தை தோற்றுவித்த ஸ்தாபகர் யார்? இவரே கில் வெல் பேடன் பவல் என அழைக்கப்படும் மேஜர் ஜெனரல் றொபேட் ஸ்ரிவன்சன் சிமித் பேடன் பவல் பிரபு ஆவார். ஜெனரர் பேடன் பவல் அவர்கள் 1857 ம் ஆண்டு மாசி 22ந் திகதி காலணித்துவ பேரரசாக கொடிகட்டிப் பறந்த இங்கிலாந்தின் தலைநகரம் லண்டன் நகரில் பிறந்தார். இவருடைய தந்தையாரான எவ். ஜி. பேடன் பவல் ஓர் மதகுருவும் ஒக்ஸ்போட் பல்கலைக் கழக விரிவுரையாளரும் ஆவார். பேடன் பவலின் தாயாரான ஹென் ரீட்டா அம்மையாரின் தந்தை அட்மிரல் வில்லியம் சிமித் அவர்கள் ஓர் கடற்படைத் தளபதி. எனவே சிமித் எனும் பாட்டனார் பெயரை தன் பெயரில் கொண்டிருந்த பவல் அவர்களும் சிறுவயதிலே வீரதீரமிக்கதாக விளங்கியதில் வியப்பில்லை. பேடன் பவல் தனது 3வது வயதில் தந்தையார் இழந்தார்.

கல்வி, வேட்டை, விளையாட்டுக்களிலும், ஆடல் பாடல்களிலும் அவர் ஆக்கம் மிக்கவராய் இருந்தார். எனினும் தனது 11வது வயதில் புலமைப் பரிசில் பெற்று "சார்ட்டட்" கவுஸ் கல்லூரியில் அவர் தமது கல்வியைத் தொடர்ந்தார். தமது 15 வது வயதில் பட்டம் பெற்ற அவர் தனக்குரிய சரியான வழியைத் தீர்மானித்துக் கொண்டவராக உடனே இராணுவத்தில் இணைந்தார்.

19ம் நூற்றாண்டிலே ஆபிரிக்காவில் தனது பிடியை இறுக்குவதற்கு இங்கிலாந்து முயற்சித்து வந்தது. எனவே குதிரைப்படைப் பிரிவொன்றின் தளபதியாக பேடன் பவல் நியமிக்கப்பட்டு ஆபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். படிப்படியாக பதவி பெற்றுக் கொண்ட பேடன் பவல் ஆபிரிக்காவின் தென்பகுதியிலே வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கிய பெருந் தாக்குதல்களை மேற்கொண்டார். களத்திலே சோர்வின்றி யுத்த தந்திரங்களைப் புகுத்தி வீரர்களை உற்சாகப்படுத்தினார். இவரது எதிரிகள் இவரை இம்பீசா (என்றும் துயில் கொள்ளாத ஓநாய்) என்று அழைத்தனர். 1887ல் பலம் பொருந்திய சூளு இனத்தவருடன் தென்னாபிரிக்காவில் பெரும் யுத்தம் ஒன்றை நடத்திய பேடன் பவல் மகத்தான வெற்றி பெற்றார்.

தனது ஆபிரிக்க சேவைக் காலத்தில் சிறுவர்களை ஆரோக்கியமுள்ளவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் உருவாக்குவது பற்றி பேடன் பவல் சிந்தித்தார். 1899ம் ஆண்டு மேப்கிங் நகரை தனது பெரும் முற்றுகையிலிருந்து பாதுகாத்துக் கொண்டார். அப்பொழுது அந்நகரின் சிறுவர்களின் உதவியை அவர் பெருமளவில் பெற்றுக் கொண்டார். தாய் நாடு திரும்பியதும் சிறுவர்களுக்கான இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதில் ஈடுபாடு கொண்டார். 1907ம் ஆண்டு இங்கிலாந்தில் பிரவுண் தீவில் 20 சிறுவர்களுடன் சாரணிய இயக்கத்தை ஆரம்பித்தார்.

1908ம் ஆண்டு இளைஞன் சாரணியம் எனும் நூலை வெளியிட்ட அவர் 1910ல் மேஜர் ஜெனரல்ரக இராணுவத்தை விட்டு ஓய்வு பெற்றார். அடுத்த ஆண்டு பெண்கள் சாரணியத்தையும் ஆரம்பித்தார். அதன் பின் தமது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி சிந்தித்த அவர் தம்மைவிட 32 வயது இளமையாளரான ஹெறன் ரீட்டா சென் கிளையர்சோம் எனும் மங்கையைத் திருமணம் செய்து கொண்டார். சீமாட்டி பேடன் பவல் சாரணியத்தைக் கட்டி வளர்ப்பதில் தொண்டாற்றினார். 1920ம் ஆண்டு உலகப் பிரதம சாரணரான பேடன் பவல் பிரபு அவர்கள் சாரணிய இயக்கத்தை உலகு முழுவதும் பரப்பினார். அவரது பணிக்காக அரசர் கில் வெல் பேடன் பவல் எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

ஈற்றிலே தமக்கு மிகவும் பிடித்தமான பணியை நிறைவு செய்து விட்டதாக உணர்ந்த பவல் அவர்கள் 1938ம் ஆண்டு தம்முடைய காலத்தின் இறுதிப் பகுதியை கழிப்பதற்காக ஆபிரிக்காவுக்குச் சென்றார். 01.08.1941 இல் ஆபிரிக்காவின் இயற்கை எழில் நிறைந்த நைஜிரி எனும் கிராமத்தில் பேடன் பவலின் உயிர் பிரிந்தது. ஆயினும் துணிந்த நெஞ்சத்துடன் கடமைகள் பல ஆற்றி வரும் ஆயிரம் ஆயிரம் சாரணரின் நெஞ்சத்தில் அவர் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

*ஆக்கம் : செல்வன் ம. பிரவீணன்*
*ஆண்டு 13 கணிதப்பிரிவு*

# WHY I JOINED SCOUTING

Though I was born with a silver spoon in mouth I have always wanted to be simple. I prefered to be humble in spite of possible powers and authorities. I happened to see all around us and round the world full of sufferings worries depression etc. These situations made me think pretty deeply and widely. As a result of my brooding over this I could arrive at some solutions. The solution rest on our minds, something psychological.

Haves can share what they own with have - nots. Healtier ones can care for the sicks and woundeds. Able - bodied may help the handicapped and involids. So can the elite class honour the depressed ones. Educateds may guide the illiterates.

In the bubble like temporal world it is nothing but foolish to be too selfish. What else could it be but splendid to be of service to others and other creatures.

Baden Powell, though he was once a military character, was the pioneer to think in similar line. His sister too endorsed his dogmas. They both paved the golden way for people like them to follow and serve. Since then scouting has been growing from strength to strength and spreading every nook and corner.

No other campaign provides for the above - explained way of living. The ones who adopt "Scoutic" life face the least difficulties and worries. A true scout makes friends with all. He has no foes and is at recieveing end of no pain both mental and bodily which is the bliss on this earth. If every one trully follows the foot prints of Badan Powell most of the problens are got over even the "Utopia" an immaginary world where every thing is supposed to be prefect would become a reality.

Mr.N.Sadatharan

## மலர்க்குழுவினர் - 1998



இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) திருமதி. வ. பத்மநாதன், திரு. சி. சுகுமாரன் (உபஅதிபர்), திரு. வை. முருகதாஸ், திரு. சு. புண்ணியசீலன் (அதிபர்), திருமதி. த. ஜெயசீலன்.
நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) திருமதி. ர. குணதாசன், திரு. வே. சந்திரசேகர், திரு. த. கெங்காதரன், திரு. அ. லோகநாதன்.

## செயற்குழு உறுப்பினர்கள் - 1998



இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக) திருமதி. ச. சக்தி தானந்ததாஸ், திரு. சி. சுகுமாரன் (உப அதிபர்), திரு. வை. முருகதாஸ் (பொறுப்பாசிரியர்), திரு. சு. புண்ணியசீலன் (அதிபர்), திரு. எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி
நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) திருமதி. ந. கமலநாதன், திருமதி. அருந்தவராஜா, செல்வன். அ. நித்தியநர்மதன், திரு. குணதாசன், திரு. சத்தியமூர்த்தி.

- நியாயமான விலைகளில்
- நவீன தொலைக் காட்சிப் பெட்டிகள்
- வீடியோ டெக்குகள்
- வானொலிப் பெட்டிகள்
- கைக்கடிகாரங்கள்.

இவை மட்டுமா

சகல விதமான மின்சாரப் பாவனைப் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

# அல்டி

75, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

- சுத்தம், சுகாதாரம் , சுவை, மணம் , தரம் இவை அனைத்தினதும் மறுபெயர் - அண்ணா கோப்பி
- போஷாக்குப் பொருட்கள் நிறைந்த குழந்தைகளுக்கேற்ற தரமான சத்துணவு – அண்ணா ஜீவாகாரம்.

தரம் நாடுவோர் தவறாது நாடுவது அண்ணா தயாரிப்புக்களையே

# அண்ணா தொழிலகம்

இணுவில்

யாழ் நகரில் சிறந்ததோர் சைவ உணவகம்

# நந்தனா ஹோட்டல்

சுவையான காலை, மதியம் , மாலை உணவுவகைளும், சிற்றுண்டிகளும் சுத்தமானமுறையில் தயாரிக்கப்படுகின்றன தவறாது நாடுங்கள்

நந்தனா ஹோட்டல்

460, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப் புடவைகள் உள்நாட்டு
வெளிநாட்டு சாறிவகைகள், பிளவுஸ் துணிகள்
ஆடவருக்கேற்ற சேட்டிங், சூட்டிங்
இவை அனைத்துக்கும்

# சிவா புடைவை அகம்

27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்களை தரமாகவும், நியாய விலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுக் கொள்ள

# அம்பிகை களஞ்சியம்

304(110) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2511

சகல விதமான விளையாட்டு உபகரணங்களை
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

## யாழ் ஸ்போர்ட் சென்ரர்

516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள் அலங்கால பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்.

## சிங்கம் வர்த்தக நிலையம்

290, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அழுக்கு அழகூட்டும் - உங்கள் இல்லமெலாம் மகிழூட்டும்
கண்களை கவர்ந்திருக்கும் - கோலங்களை அள்ளித்தரும்
அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள்,
பரிசுப்பொருட்கள், அல்பங்கள் இன்னும்பல
நியாய விலையில் பெற

## பெஷன் ஹவுஸ்

இல 203 (65), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 2197

# எங்கள் ஸ்தாபகர் - சில தகவல்கள்
# றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு

❖ சாரணியத்தின் ஸ்தாபகர் றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் ஆவர். இலக்கம் 06 ஸ்ரான் கோப் வீதி வார்ட் இல 2 லண்டனில் 1857 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார்.

❖ இவரது தந்தையின் பெயர் சங்கைக்குரிய எவ். ஜி. பேடன் பவல் ஆவார். இவர் ஏற மதகுரு தாயின் பெயர் கென்றீற்ரா கிறேசி ஆவார். இவர் ஒரு விஞ்ஞானி ஆவார்.

❖ பேடன் பவல் தனது மூன்றாவது வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் அவரது குடும்பம் தாய் பிள்ளைப் பாசத்துடனும் சகோதர ஒற்றுமையுடனும் வளர்ந்து வந்தது.

❖ இந்நிலையில் பேடன் பவல் 1870ம் ஆண்டு 12 வயதில் உபகார சம்பளம் பெற்று சாட்டற் கவுஸ் கல்லூரியில் உயர்கல்வி கற்றார். கல்லூரிச் சுற்றாடலில் உள்ள காட்டில் வெட்டவெளி வாழ்க்கையை பெற்றார்.

❖ இவர் நடிப்பு, ஓவியம், விளையாட்டு, சங்கீதம், வெட்டவெளி வாழ்க்கை, படகு ஓட்டுதல் ஆகிய புறக் கலைகளில் ஆற்றல் மிக்கவராக திகழ்ந்தார். தனது 19 ஆவது வயதிலே பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு இராணுவத்தில் சேர்ந்தார். குதிரைப் படையில் பணிபுரிந்தார்.

❖ இந்தியாவில் பன்றி வேட்டைக்கான பரிசினைப் பெற்றார். சூலு வம்சத்தாருடன் புத்தகத்தில் இவரது திறமையை உணர்ந்த அவர்கள் இவரை என்றும் துயில் கொள்ளாத ஓநாய் (இம்பிகா) என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் எலும்புக் கோர்வையால் ஆன மாலையையும் அணிவித்தனர். இதன் அடியொற்றியது தரு சின்ன மணியாகும்.

❖ மோல்றாவில் மூன்று வருடம் இராணுவச் செயலாளராக பணிபுரிந்தார். 1897 இல் 13 ஆவது குதிரைப் படைத் தளபதி ஆனார். 1899 இல் மேப்கிங் நகரை எதிரிகள் முற்றுகையிட்ட போது சிறுவர்களின் உதவியுடன் 217 நாட்களுக்கு நகரைப் பாதுகாத்து பெரும் வெற்றி வீரர் ஆனார். இந்த நிகழ்வு மூலம் சிறுவர்கள் உரிய வழி நடத்தினால் எதனையும் சாதிப்பர் என்ற முடிவையும் பெற்றார்.

❖ 1901ம் அண்டு பெரும் வெற்றி வீரனாக தாய் நாடு திரும்பினார். 1903ம் ஆண்டு சாரணியத்திற்கு துணை எனும் நூலினை பகுதி பகுதியாக வெளியிட்டார்.

❖ விக்ரோறியா மகாராணியின் வேண்டுகோளிற்கிணங்க பரீட்சார்த்தமாக 1907ம் ஆண்டு இங்கிலாந்தில் சாரணர் பாசறையை நடாத்தி பெரு வெற்றி கண்டார். 1908ம் ஆண்டு இளைஞர் சாரணியம் என்ற நூலை வெளியிட்டார்.

❖ 1909ம் ஆண்டு இவரது சகோதரி அக்னஸ் முதல் பெண் சாரணராகத் தோன்றி 1910ம் ஆண்டு பெண் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1912ம் ஆண்டு உலக சாரணர் இயக்க சுற்றுலாவினை மேற்கொண்டார். 28.09.1912 இல் உத்தியோகப் பூர்வ திருமணம் செய்து 30.10.1912 இல் இங்கிலாந்தில் சென் கிளையர் சோம்ஸ் இன் மகளான ஒலெவ் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

❖ இவரது மனைவி ஒலெவ் எசன் கிளையர் 22.02.1889 இல் பிறந்தவராவார். இவர்களுக்கு பீற்றர், கீதர், பெற்றி ஆகிய 3 பிள்ளைகள் பிறந்தனர்.

❖ 1916 இல் குருளைச் சாரணர் பிரிவினை ஆரம்பித்தார்.
1918 இல் திரி சாரணர் பிரிவினை ஆரம்பித்தார்
1919 இல் கில்வெல் பூங்காவை ஆரம்பித்து வைத்தார்.
1920 இல் முதலாவது உலக சாரணர் ஜம்போறியில் உலகப் பிரதம சாரணராக பிரகடனப் படுத்தப்பட்டார்.
1925 இல் வலது குறைந்தோர் சாரணியத்தை தொடக்கி வைத்தார்.
1929 இல் 5ம் ஜோர்ஜ் மன்னரால் பிரபுப் பட்டம் வழங்கப்பட்டது.
1930 இல் சீமாட்டி பேடன் பவல் உலகப் பிரதம சாரணியாக நியமிக்கப்பட்டார்.

❖ 1938ம் ஆண்டளவில் சாரணியம் நன்றாக வளர்ந்து விட்டது. அது தானாக வளரும். தான் ஒன்று இனி செய்ய வேண்டியதில்லை என்று கூறி தன் வாழ்நாளில் மிகப் பிடித்தமான இடமான ஆபிரிக்காவில் உள்ள கென்யாவிற்கு சென்று இறுதிக்கால வாழ்க்கையை கழித்தார்.

❖ 1941ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி அன்று அந்த புனிதமான உயர்ந்த உள்ளம் நித்திய இளைப்பாறலைப் பெற்றது.

தொகுப்பு
திரு ம. ரவீஸ்வரன் (Dip in teach)
*சாரணிய உதவி பொறுப்பாசிரியர்*

# சாரணியம்

பேடன் பவல் ஆக்கி வைத்த
சாரணியம்
உயர் பண்புகளைப் பரப்பி நிற்கும்
சாரணியம்
நேசமுடன் வாழ வைக்கும்
சாரணியம்
நெடுநாளைத் தூய்மையாக்கும்
சாரணியம்
சிந்தைகளைத் தூய்மையாக்கும்
சாரணியம்
சிந்தித்துச் செயலாற்றும்
சாரணியம்
பாசமுடன் பழகவைக்கும்
சாரணியம்
கூட்டான வாழ்க்கைக்கு
சாரணியம்
குதூகலிக்கும் பொழுதுக்கு
சாரணியம்
உயர பாங்கான சேவைக்கு
சாரணியம்
மன உறுதிக்கு வித்தாகும்
சாரணியம்
சமூகத்தின் எழுச்சிக்கு
சாரணியம்
சாதிமத பேதமற்ற
சாரணியம்
ஒய்வு மறைவற்ற
சாரணியம்
உண்மைகளை உச்சரிக்கும்
சாரணியம்
ஒற்றுமையின் உயர்வெல்லை
சாரணியம்
சரித்திரத்தில் உயரவைக்கும்
சாரணியம்
சரித்திரத்தில் நீயும்
உயர்ந்து நிற்க
சாரணியத்தில் இணைந்து விடு

**திரு E. K. V. ஜோன்சன் B.Sc.**
*சாரணிய பொறுப்பாசிரியர்*

# ARUL VINAYAGAR

**Dealers in motor vehicles spare parcs**

**No- 103, Stanley Road.**
**Jaffna.**

எம்மிடம்:-

- புதிய மோட்டார் சைக்கிள்கள்
- பற்றரி வகைகள்
- தரமான அசிட் வகைகள்
- சோலர் வகை
- மினபஸ், கார் ஷோ உபகரணங்கள்
- ரயர், ரீயூப் வகைகள்
- மோட்டார் உதிரிப்பாகங்கள்

அனைத்தும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்

அருள் விநாயகர் மோட்டார்ஸ்
103, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

யாழ் மக்களே:

உங்கள் தேவைகளுக்கு நிறைவு செய்ய இன்றே நாடுங்கள் யாழ் நகர் கன்னா திட்டியில் உள்ள சாந்தி உணவகத்தில் உங்கள் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான முறையில் தயாரித்து வழங்கும் சகல மதியம் மாலை நேரம் சைவ, அசைவா உணவு வகைகளுக்கும் மற்றும் ரோல்ஸ் கட்லட் பற்றிஸ். வடைகளும் தித்திக்கும் இனிமையான மஸ்கட் பூந்திலட்டு போதிய கேக் வகைகளுக்கும் சுவையான காப்பி தேனீர் குளிர்பான வகை அருந்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய யாழ் நகரில் ஒரே ஸ்தாபனம் சாந்தி உணவகம்

## சாந்தி உணவகம்

309, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

மிதி வண்டிகள், உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப்புகள் CIC பெயின்ற் வகைகள் மற்றும் ரேடியோ, வீடியோ கசட், பிலிம்ரோல் போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள யாழ் நகரில் தனித்துவமான நிறுவனம்.

# இ.ச.பேரம்பலம் சகோ நிறுவனம்

50,52, & 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

- ஆடவர் நங்கையருக்கான சகலவித உள்ளாடைகள்.
- குழந்தைகளுக்கான பாவனைப் பொருட்கள்
- சகலவிதமான காலுறைகள் (Socks)
- பாடசாலை உபகரணங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- வாழ்த்து மடல்கள்

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள

# லிங்கன் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அத்துடன் உங்கள் தொலைபேசியில் சர்வதேச நேரடி இணைப்பை பெற்றுக்கொள்ள எம்மை அணுகுங்கள்.



1997ம் ஆண்டு மாவட்டத்தில் பாசறையில் முதலாமிடத்தைப் பெற்ற சாரணர் குழு.



1998ம் ஆண்டுக்குரிய சாரணிய செயற்குழுவினர்.

ஒ

திட்ட
பேரு
நாடுக
மிகத்

எந்த
வயது
மேம்
செய
இன்ற
துணி
ஆண்
கடற்
பிறந்
முதற்
இயக்
நல்
கால
சார
தொ
தொ

சார

உற
நம்
போ
பார
உல
பயி
நாட்
ஒற்
கொ

உல
மரி
கொ
அறி
துய

இவ்
படு
செ
குடு
அழ
நன்
மக்
ஈடு

என
ஆ
நல்

# சாரணியம் எதற்காக!

ஒவ்வொரு நாட்டிலும் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதே சாரணிய இயக்கத்தின் தலையாய நோக்கமாகும். இந்நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே சாரணிய இயக்க அமைப்பு முறைகளும், சாரணியப் பயிற்சித் திட்டங்களும் அமைக்கப்பட்டவையாகும். இதன் மகிமை காரணமாகவே 1907 இல் 20 பேருடன் ஆரம்பித்த இவ்வியக்கம் இன்று பெருவிருட்சமாக, சர்வதேச இயக்கமாக, 118 நாடுகளில் மொத்தம் 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட சாரணியரைக் கொண்ட இயக்கமாக மிகத் துரித வளர்ச்சி பெற்று நிற்கின்றது.

எந்த வயதினரும், எந்தப் பாலாரும் இவ்வியக்கத்தில் ஈடுபட சந்தர்ப்பம் உண்டு. வயதுக்கேற்றபடி சாரணர் நிலைகளில் உயர்வு பெற்றுச் செல்ல முடியும். சமூக வாழ்வின் மேம்பாட்டிற்கு ஏட்டுக் கல்வி மாத்திரம் பூரண பலனளிக்காது. அதனுடன் கூடிய செயன்முறைகளும், தன்னிச்சையான, நன்மனப்பாங்கான செயற்பாடுகளும் மனிதனுக்கு இன்றியமையாதது. உண்மை, நேர்மை, சத்தியம், தியாகம் கொண்ட உறுதியானதும், துணிவானதும், இன்பமானதுமான நல்வாழ்வு தான் தேவை என்றிருந்த போது 1857ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி இங்கிலாந்து தேசத்தில் எவ்.ஜீ.பேடன் பவலுக்கும், கடற்படைத் தளபதி டபிள்யூ. ரீ. சுமித் என்பவரின் மகள் எச். சுமித்துக்கும் மகனாகப் பிறந்தார். பேடன் பவல் பிரபு சமுகத்துக்கு எனப் பிறந்த ஒரு மகனாவார். இவர் முதற்கூறப்பட்ட உண்மை முதலானவற்றை மனிதனுக்கு ஏற்படுத்தும் பொருட்டே சாரணிய இயக்கத்தை ஸ்தாபித்து நல்வழியில் வளர்த்து விட்டுச் சென்றுள்ளார். அவர் காட்டிய நல்வழியில் தொடர்ந்தும் மனித சமுதாயம் மேம்படைய சாரணியத்தின் பாதையில் காலம் காலமாக ஒழுக வேண்டியது முக்கியமாக இளம் சந்ததியினரின் கடமை எனலாம். சாரணியத்தில் இளைஞர் பெறும் பயிற்சிகளும், அனுபவங்களும், திறன்களும் அவர்களின் தொழிற்துறைக்கு வழிகாட்டியாகவும், எதிர்கால நல்வாழ்வுக்கு உறுதுணையாகவும், தொடர்ந்து வரும் சந்ததிக்கு மூல வேராகவும் அமைகின்றன.

சாரணியம் சிறந்த ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்து வாழ்வில் வெற்றியடைய உறுதுணையாகின்றது. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது திருவள்ளுவர் வாக்கு. நம்நாட்டுப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் விளையாட்டு, நடிப்பு, கதை, கலை, கைப்பணி போன்ற ஓய்வு நேரச் செயல்களால் நல்வழியில் ஈடுபடுவதன் மூலம் நம் நாட்டின் பாரம்பரியத்தை நிலைநாட்ட முயல்கின்றோம். இவற்றில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உணர்ச்சியுள்ளவர்களாகச் செயற்படும் பயிற்சியினைப் பெறுகிறோம். பல்வேறு பயிற்சிகளும் சிறந்த நுட்பத்துடன் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. சமயத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்யும் பொறுப்புணர்ச்சியையும், பெரியோருக்கு கீழ்ப்படிதலையும் ஒற்றுமையாகக் கூடி வாழும் பழக்கத்தையும், சிறந்த சகோதரத்துவத்தையும் உருவாக்கிக் கொள்கின்றோம்.

உண்மை, நேர்மை, நீதி, மதிப்பு, நம்பிக்கை, கீழ்ப்படி, இரக்கம், அடக்கம், ஒத்துழைப்பு, மரியாதை, சிக்கனம் போன்ற பல உயர்ந்த நற்குணங்களை வளர்க்கவும் பழகிக் கொள்கிறோம். விளையாட்டு - உடற்பயிற்சி மூலம் திண்ணிய உடலும், நுட்பமான அறிவும் பெற்று தன்னம்பிக்கை உடையவர்களாகவும் திகழ முடிகிறது. துணிந்த மனம், துயரமின்மை ஆகியன சிரித்த முகத்துடன் இன்பவாழ்வு பெற வைக்கின்றன.

இவ்வியக்கத்தின் மூலம் சாரணச் சிறுவர்களின் உள்ளார்ந்த சக்திகள் வெளிக்கொணரப் படுகின்றன. இதனால் ஒவ்வொரு சாரணனும் எத்தகைய தொழிலையும் எதிர்காலத்தில் செய்வதற்குத் தகுதியுடையவனாகின்றான். இயற்கைச் சூழலில் சாரணர் குழு ஓர் இன்பகரமான குடும்பமாகும். சாரணன் தினமும் எவருக்காவது ஓர் நற்பணி புரிந்து இன்பத்தைத் தானும் அனுபவித்து, பிறரையும் அனுபவிக்கச் செய்து எப்பதவியையும் உண்மையோடும், அழகாகவும் நன்மை பயக்கவும் செய்கின்றான். சாரணியம் ஓர் சர்வதேச இயக்கமாக இருப்பதனால் சர்வதேச மக்களுடன் சகோதரர்களாகப் பழகவும், அவர்களின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றவும் ஈடுகொடுக்கவும் முடிகின்றது.

எனவே பெற்றோர் விருப்பப்படி தம் மகன் ஒரு பூரணத்துவமுள்ள, சிறந்த சேவை மனப்பாங்குள்ள, ஆளுமையுள்ள பிரஜையாக வருவதற்கு அவனைச் சாரணர் இயக்கத்தில் சேர்ப்பது சாலவும் நன்று.

நன்றி

*ஆக்கம் : செல்வன் ந. குமேஸ்குமார்*
*ஆண்டு 10*

# உதவும் கரங்கள்

அன்பு கனியவே பண்பு பெருகவே

அவனியில் புகழ் ஓங்கவே

நல்ல மனதுடன் நாடு செழிக்கவே

நாமும் செய்குவோம் உதவியே.

(அன்பு கனி)

உதவிக் கரங்கள் நீட்டி நாங்கள்

உலகம் தன்னை உயர்த்துவோம்

உரிமையுடன் துணிந்து நின்று

உதவி செய்தே மகிழுவோம்.

(அன்பு)

பற்றுறுதி உடைய நாங்கள்

பணிவுடன் செயலாற்றுவோம்

பேடன் பவலின் வழி நடந்தே

பிறருக்குதவி செய்குவோம்.

(அன்பு)

இயன்றவரை திறமையாக

எதையும் நாங்கள் ஆற்றுவோம்

இறுதி வரை சாரணியத்

தந்தையை நாம் போற்றுவோம்.

(அன்பு)

ஆக்கம் :

திருமதி செள. சச்சிதானந்ததாஸ்

25ம் ஆண்டு நிறைவில் வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளுடன்
"ராஜா கிறீம் ஹவுஸ்"

♦ அன்றும் இன்றும் தித்திக்கும் தேன்சுவை ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்கள்.

♦ ஐஸ்கிறீம் தயாரிப்பிற்கு முதல்தரமான பால்மா, சீனி, மற்றும் உலகப்புகழ் பெற்ற இலண்டன் 'புஸ்போக்' கம்பனியினரின் உணவுத் தயாரிப்பிற்கெனவே தயாரிக்கும் வகையறாக்களை மட்டுமே பயன்படுத்துதல்.

♦ சுத்தம் சுகாதாரம் பேணப்படுதல்.

இவை அனைத்தும் இன்று வரை நாம் நிலைத்து நிற்கும் காரணங்கள்

தரம் நாடுவோர் தவறாது நாடுமிடம்

ராஜா கிறீம் ஹவுஸ்

இல: 36,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

இல: 64, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்
இவற்றின் மறுபெயர்தான்

# நியூ கல்யாணி
# நகை அகம்

தரமான 22 கரட் நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

நியூ கல்யாணி நகை அகம்
87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
(வண்ணை சிவன் கோவில் முன்பாக)

நினைவை விட்டகலாத உங்கள் இனிமையான நிகழ்வுகளை படம் பிடித்திட

மங்களகரமான நிகழ்வுகள் , பாடசாலை நிகழ்வுகள் போன்றவற்றை புகைப்படமாக்கி
காலந்தாழ்த்தாது தங்கள் கரங்களில் தவழ விடுபவர்கள்

சிவம் ஸ்ருடியோ
சுண்ணாகம்

# THE VALUE OF SCOUTING

Scouting is an inter national movement established a centuries ago by a great Enlishman named ford Baden Powell. The idea of scouting was taken from the Army though scouts are not soldiers.

In war time. Picked men are sent to find out what they can do about the ~~one~~ene my. They are men who have been trained to move about quickly and quietly to take note of things carefully and to remember what they observe. These information must be of correct or it would be of no use. These men are called scouts and are known as the eyes of the Army.

Like the scouts of the army boy scouts are trained to take note of things and to remember what they observe. If I join in scouting. I can be trained on military lines and is taugul to be of service to others. If I am a scout I will be prepared to face boldly every difficulty and at the same time help others. A scout must smile and whistles under all difficulties. The most important thing about the scout is his honour. A scouts honour is to be trusted. A true scout's must be clean in thought, cheerful and courteous. He is a friend to Animals.

Scout learn many useful things - when they grow old they may be good and useful citizens. A scout learns how to put up and take down a tent and how to cook simple meal. He learns how to read and to make the best possible use of a map. A scout is taught how to observe the habits of birds and animals. He learns how to row a boat. Swim the river and to walk long distances. A scout knows how to treat an injured person.

The ideal of the scout is service to society. Every scout is expected to do at least one kind of deed a day. He must help a blind man to cross the road or to give a tired animal a drink of water. If a man gets hurt he renders the first aid and looks after him till the doctor takes charge of him if a fire breaks out he helps to put out the fire. When a scout sees some one drowning he rushes in and tries to rescue him at the risk of his own life. In case of theft or danger he rings the police at once.

If I remain a scout I will not be fanatic I will be broad minded and large hearted I will be free from all kinds of pride and prejudices. I will not be a religions hot head. I will not differnciate people on the ground of race or religion. I will consider the world as one community and all the people as my friends scouting is a valuable movement that can bring world together. It aims at unity in diversity.

It knows no caste or creed or colour. It has the possibilities of creating an international brother hood that belives in service to all.

***C. Pathmakanthan***

# சாரணியமும் சமூகத்தில் அதன் பங்கும்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுக்கமைய தம்மை மறந்து தனித் தொண்டு புரிந்து பொது நலம் பேணும் பேரறிவாளர் குழுவே சாரணர் இயக்கம் எனப்படும். கடந்த அரை நூற்றாண்டுக் காலமாய் அகிலம் முழுவதும் பிறர் நயம் கருதும் இப்பேரியக்கம் ஆற்றிய சேவை பேசுதற்குரியது. சுயநலமே உருவாய இம் மண்ணுலகிற்கு இ..து ஒரு சுடர் விளக்கென ஒளி காலுகிறது. இளைஞர் உள்ளங்களில் புனிதவொழுக்கத்தையும், கட்டுப் பாட்டையும் பலன் கருதாது பணி புரியும் பரந்த மனப்பான்மையையும் மலரச் செய்கிறது.

இவ்வியக்கத்தின் பொற்கதிர் இருளடைந்த கானிலே கொடுவன விலங்குகளின் நடுவே அநாகரிகத்தின் இடையே முதன் முதற் கதிர் வீசியதெனலாம். இங்கிலாந்தின் இராணுவ வீரனாய்த் தென்னாபிரிக்காவெனும் இருண்ட கண்டத்தில் பணியாற்றிய பேடன் பவல் எனும் பேரறிவாளரின் உள்ளத்திலே இப் புதிய இயக்கம் உருவாகியது. 1907ம் ஆண்டு 25 சிறாருடன் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இளஞ்சிறார் உள்ளங்களில் கூட்டுறவு மனப்பாங்கு, தன்முயற்சி, தன்னம்பிக்கை முதலாம் பண்புகளை வளர்க்க வேண்டும் என்பது இவரது அவா ஆகும். 15 ஆண்டுகள் உருண்டோடிய பின் கிழக்கு நாடுகளுக்கும் இவர் இவ் வியக்கத்தைப் பரப்பினார். இவரது துணைவியாரின் தலைமையில் சாரணர் இயக்க பிரிவாகிய வழிகாட்டி இயக்கமொன்று பெண்களுக்கென மலர்ந்து விளங்கியது.

இவ்வியக்கத்தில் 7 – 11 வயது உடையவர் குருளையர் எனப்பட்டனர். 11 – 17 வயதிற்கும் இடைப்பட்டோர் சாரணர் பிரிவு எனப்பட்டனர். மேற்பட்ட வயதினராகிய 3ம் பிரிவினர் திரிசாரணர் எனும் பிரிவிலடங்குவர். பெண் மணிகளில் முதற்பிரிவு சிறுதோழியர் எனவும் மேற்பட்டோர் வழிகாட்டிகள் எனவும் பிரிக்கப் பட்டுள்ளனர். இப்பிரிவினருக்குரிய பாடத்திட்டம், செயல்திட்டம் ஆகிய பிரிவுகளுக் கேற்ற வகையில் கொடுக்கப் பட்டுள்ளது. அத்துடன் என் நாட்டிற்கும் எனது சமயத்திற்கும் கடமையாற்றுவேன், சாரணர் இயக்க விதிகளுக்கு கீழ்ப்படிவேன், எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் எனும் மூன்று பொன் போன்ற மந்திரங்கள் இவர்களது உறுதிமொழியாகும். எதனையும் கூர்ந்து அவதானித்தல், எவர்க்கும் நண்பராய்த் திகழ்தல், சிக்கனமாய் வாழ்தல், சொல் செயல் சிந்தனை என்பவற்றில் தூய்மை போன்றனவும், துடிப்புணர்ச்சியோடு தூய தொண்டாற்றும் இளைஞர்களின் ஈடற்ற வேகமும் இயக்கத்தின் மகிமையை இன்னொரு படி உயர்த்துகின்றது. பொதுசன விழாக்கள், வரவேற்பு நிகழ்ச்சிகள், கலாசாலை விளையாட்டுக்கள், மங்கல ஊர்வலங்கள், அந்திமச் சடங்குகளில், போர் நேரத்தில், கோயில் திருவுலாக்களில், ஏனைய நிகழ்ச்சிகளில் இவர்கள் தம்மை மறந்து தணியா ஆர்வத்தோடு பணியாற்றுவது வியப்பிற்குரியது. துயரங்களை துச்சமாக மதிக்கும் இவர்களது பூமிப்பொறை, எல்லை கடந்த தாழ்மை, மலர் முகச் செழிப்பெல்லாம் எம்மிதயங்களை ஈர்த்துப் பற்றிக் கொள்கின்றன. காலத்துக்குக் காலம் இவர்கள் அமைதிச் சூழல்களை நாடி கூடாரங்களில் ஒன்று கூடி வாழ்கிறார்கள்.

தங்குமிடம் நிருமாணித்தல், உணவு தயாரித்தல், சாரணருக்குரிய செயற்பாடுகள் போன்ற பயிற்சிகளைப் பெறுகிறார்கள். அவ்விடங்களில் அன்பும், அமைதியும், புனிதப் பண்புகளும் அவர்களது சொத்துக்களாய் அமைகின்றன. ஏனைய சாரணர்களுடன் கூடி தமது நட்பு, சேவை போன்றவற்றை பரிமாறிக் கொள்கின்றார்கள். எந்நேரத்திலும் எக் காலத்திலும் சேவை செய்தலே இவர்களின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

இப்புனித இயக்கம் மூலம் பொது நலத் தொண்டும், தன்னலமற்ற தியாக சேவையும், இன்று நம்மிடை பல்கிப் பெருக வேண்டும். சாரணீயம் குழப்பங்களின் மத்தியில் குளிர் பூந்தென்றலென நின்றுலவ வேண்டும். சுயநலமெனும் வெம்மை தணிக்கும் சுனையூற்றாக வேண்டும். தேசிய உணர்ச்சியை நாட்டிந்நோக்கி நல்ல குடிகளை உருவாக்க வேண்டும். எனவே 'பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்வோம்' என்ற பாரதியின் வாக்கைப் போல இச் சாரணீயம் கலைக்கழகமெங்கும் நிலைத்து வளர வேண்டும். 'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்' என்னும் மனப்பாங்கிலே சேவை செய்து மக்கள் வாழ்வில் புனிதச் சுடரொளி பரவப் புதுவாழ்வுப் பூஞ்சோலை பூத்துக் குலுங்க இச்சாரணியம் ஓங்குவதாக.

"வளர்க சாரணியம் ஓங்குக அதன் பணி"

நன்றி

**ஆக்கம் : கே. மனோகரன் (P.L)**

- ☞ சுத்தம்,
  ☞ சுகாதாரம்,
  ☞ சுவை,
  ☞ மணம்,
  ☞ தரம்

  இவை அனைத்தினதும் மறுபெயர் - அண்ணா கோப்பி

- போஷாக்குப் பொருட்கள் நிறைந்த குழந்தைகளுக்கேற்ற தரமான சத்துணவு – அண்ணா ஜீவாகாரம்.

*தரம் நாடுவோர் தவறாது நாடுவது அண்ணா தயாரிப்புக்களையே*

# அன்னா தொழிலகம்

இணுவில்

மோட்டார் சைக்கிள்கள், ரயர்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் இவை அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

# கொழும்பு மோட்டேர்ஸ்

37 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தரம் நாடுவோர் தவறாது நாடும் இடம்

**COLOMBO MOTORS**
**37 STANLEY ROAD**
**JAFFNA**



# கங்கை

## கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ

# கலாஸ்

குளிர்பான ஸ்தாபனம்

கிறீம் ஹவுஸ்

(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

# நாங்கள் சாரணர்கள்

சாரணியம் என்ற நல்ல சபை தனிலே சேர்ந்து
சஞ்சலங்கள் அற்ற புது உலகதனைப் படைப்போம்
நேர்மையான உளத்துடனே நிதம் உழைப்போம் - நாம்
நெஞ்சில் வஞ்சம், கள்ளம் ஏதுமின்றி நடப்போம்.

மானிடத்தின் மேன்மைதனை மேதினியில் பரப்பி
மட்டிலாத மகிழ்வதனை மனிதரிடை காண்போம்
பற்றுறுதி எனும் பாண்மையிலே திளைத்து - என்றும்
பங்கமிலா புதுயுகத்தைப் பாசமுடன் அமைப்போம்.

சபையில் உள்ள அனைவரையும் சோதரராய் மதிப்போம்
சொந்தம் கொண்டு நாம் இணைந்து சரிநிகராய் வாழ்வோம்
அகிம்சை எனும் ஆயுதத்தால் அவனிதனைத் திருத்தி
அன்பு தவழ் ஆலயமாய் நிதம் விளங்க வைப்போம்.

ஏழைகட்கு மனமுவந்து உதவி பல செய்து
ஏற்றமுடன் அவர் வாழ ஆனவரை உழைப்போம்
தீதிலா நன்மை சூழ் தீவதனை அமைத்து - நாம்
தாயவளைப் போற்றுதற் போல் நட்பினையும் காப்போம்.

அர்ப்பணிப்பு என்ற அரிய அடித்தளத்தில் நின்று
அன்புடனே அனைவருக்கும் உரிய சேவை செய்வோம்
தீரமுள்ள தியாகிகளின் தாள்களை நாம் தொழுவோம்
தரணிதனில் தன்மதியாய் பெருமையின்றி வாழ்வோம்.

*ஆக்கம் :*
*மு. உதயகரன்*
*2000 க. பொ. த (உ/த) கணித பிரிவு*

# "சாரணனே நீ வாழி"

'தயாராக இரு' என்ற தாரக மந்திரத்தை
அயராது வாழ்வினில் கடைப்பிடித்தே - வாழ்ந்து
பெயரோடு புகழும் பெற்று நீ என்றென்றும்
உயர்வான வாழ்வினில் உன்னதமாய் வாழ்ந்திடுவாய்.

இன்பத்தைத் துடைத்திடவும் துயரத்தைப் போக்கிடவும்
இன்பத்தைப் பெருக்கிடவும் என்றென்றும் உழைத்திடும் நீ
பண்பான தந்தையாம் பேடனின் வழி நின்று
அன்போடு நீ ஆற்றும் அரும் பணிகள் செழித்திடுமே.

கலங்காத உள்ளம் கொண்ட பற்றுறுதியுடையவனே
கருணையுடன் கனிவும் கண்டிடுவோம் உம்மிடத்தே
கடமையே கண்ணாக கட்டளைக்காய் காத்திருந்து
காருண்யத்துடன் நீ ஆற்றும் பெரும் பணிக்காய் போற்றிடுவோம்.

அன்புக்காய் ஏங்கி நிற்கும் அனைவரையும் அரவணைப்பாய்
இன்சொல் கூறியே என்றும் இன்முகம் காட்டிடுவாய்
நண்பராய் எவருடனும் நட்போடு கரம் குலுக்கிடும்
பண்பான சாரணனே பல காலம் நீ வாழி.

மழையிலும் வெயிலிலும் மலையிலும் அலையிலும்
அழைப்பு வரும் போதெல்லாம் களைப்பு ஏதுமின்றி
ஏழையென்ன கோழையென்ன எல்லோருக்கும் நல்ல படி
உழைப்பதற்காய் ஓடி வரும் சாரணனே நீ வாழி.

*ஆக்கம் : செல்வன் க. கஜனன்*
*ஆண்டு 12 கணிதம்*

தரமான சைவ உணவுகளை உடனுக்குடனும், ஓடருக்கும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கண்ணன் லொட்ஜ்

(சைவ உணவகம்)

6, சேர்.பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

'மணிகண்டன் தரகு சேவை நிலையம்'

காணி, கடை, வீடு வாங்குவோம் விற்போரும் தொடர்பு கொள்ள
வேண்டிய நம்பிக்கை நாணயம் நிறைந்த ஸ்தாபனம்

42/3 College lane
Neeraviyadi
Jaffna.

42/3 கல்லூரி ஒழுங்கை
நீராவியடி
யாழ்ப்பாணம்.

திருமணம் மற்றும் முகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
சேட்டிங்- சூட்டிங் போன்றவற்றை உங்கள் எண்ணம் போல
தெரிவு செய்திட
விஜயம் செய்யுங்கள்.

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்

57, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

சகல விதாமான அச்சக வேலைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்

## நீரஜா அச்சகம்

சுன்னாகம்

## BOSECO

**MANUFACTURER OF EXERCISE BOOKS, SCHOOL PRACTICAL BOOKS, Letter pads, Autograph and distributors of Stationeries**

**3, Modern Market**
**Hospital Road,**
**Jaffna.**

**252, Poin Pedro Road,**
**Nallur.**
**Jaffna.**

கொம்பியூட்டர் கங்கை பிறின்ட்
கங்கை றோணியோ
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# சாரணியமும் சமுதாயமும்

ஒருவன் எப்போதாவது ஒருமுறை தன்னைச் சாரணியத்தில் இணைத்துக் கொண்டால் அவன் இறக்கும் வரை சாரணனே. நாம் எடுத்த சத்தியப் பிரமாணத்திற்கு உயிருள்ள வரை கட்டுப்பட்டு நடத்தல் அவசியம். சத்தியப் பிரமாணம் ஒரு சாரணனுக்கு மட்டும் உரித்துடையது அன்று. ஒரு நாட்டின் ஒரு தேசத்தின் நற் பிரஜை ஒவ்வொருவருக்கும் உரித்துடையதே. இதைச் சாரணன் மட்டும் தான் கடைப்பிடிக்க வேண்டும் என்பதல்ல. ஒரு ஆரோக்கியமான மதவாதியாலும், அரசியல்வாதியாலும், சமூகத் தொண்டனாலும் கடைப்பிடிக்கப்படலாம். கடைப்பிடிக்க வேண்டும். நாட்டில் நல்ல பிரஜையை நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்திற்கு வித்திட சாரணியம் அமைகின்றது.

சாரணியம் இளைஞர்களைத் தன்னம்பிக்கை உடையவராகவும், சமூகத்தில் திறமை மிக்கவர்களாகவும், பொறுப்பு வாய்ந்த குடிமகனாகவும் உருவாக்குகின்றது. அது மட்டுமன்றி இளைஞர்கள் தங்களுக்கும், சமூகத்திற்கும் தாங்கள் ஆற்ற வேண்டிய பணிகளை உணர்ந்து செயலாற்றக் கூடியவர்களாகப் பயிற்றுவிக்கும் ஒரு கல்வியாக சாரணியம் விளங்குகிறது. இளைஞர்கள் தங்கள் கருமங்களைச் சமூகத்துடன் இணைந்து செயற்படக் கூடியதாக்குவதற்கு வழி சமைப்பது சாரணியம். சூழலில் ஒரு 'ஜீவ சக்தியாக' அமையக் கூடிய வகையில் உள்ளது.

சாரணியத்தின் மூலம் தனியொரு பிள்ளை மட்டும் நன்மை அடையாமல் அவன் வாழும் சமூகமும், சாரணயம் இயங்கும் இடமும் சிறந்த பயனைப் பெற வேண்டும். மேலும் சாரணப் பயிற்சி பெற்றவன் கடமை உணர்வோடும், தியாக சிந்தனையோடும் வளர்ந்து பிறருக்கு உதவுவதே வாழ்வின் குறிக்கோள் என எப்போதும் எண்ணுபவன். அது மட்டுமல்ல சிக்கனம், சுறுசுறுப்பு, கலைநாட்டம், ஆபத்தில் உதவுதல் போன்ற நற்பண்புகளை வளர்த்து, உடல் ஆரோக்கியத்திற்கும் சாரணப் பயிற்சி வழிகோலுகிறது. இதன் மூலம் அவன் வெறும் ஏட்டுக் கல்வி மட்டும் கற்றவனாக இல்லாமல் 'மனிதன்' என்ற சொல்லுக்கு ஒரு சிறப்பு உதாரணமாகவும் மாறுகின்றான்.

சாரணச் செயற்திட்டத்தில் சாரணர்கள் பற்றிய வகையீடு ஒவ்வொரு வகை சாரணர்களுக்குமான பொறுப்புப் பண்புகள் அவர்களது கைத்திறன் சமூகம் பற்றிய நோக்கு, துணிகரச் செயல்கள், விருதுகள் சின்னங்கள் பெறுவதற்கான ஒழுங்குகள் மதிப்பீடு முதலிய பல்வேறு விடயங்களையும் சாரணியர்கள் ஒவ்வொருவரும் பெறுவதற்கு முனைதல் அவசியம்.

அன்றைய அமெரிக்க ஜனாதிபதி அமரர் கென்னடியின் கூற்று இது 'உனக்கு நாடு என்ன செய்தது என்பதை விட நீ நாட்டுக்கு என்ன செய்தாய்?' இது ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்க வேண்டியது. எம் நாட்டையும் எம் மொழியையும் நேசிக்கின்றோம். நாம் பிறந்த மண்ணின் அருமை பெருமைகளை நானிலம் அறிய வைக்க வேண்டும். செயலிலும் காட்டுதல் வேண்டும்.

சாரணியத்தின் பெருமையை அனைவரும் உணர வேண்டும். இதன் மூலம் சமுதாயம் சிறப்படைய வேண்டும்.

**"நன்றே செய்வோம் நன்றும் இன்றே செய்வோம்"**

*ஆக்கம் : செல்வன் கு. சுதர்சனன்*
*ஆண்டு 10*

# சாரணியத்தைப் போற்றிடுவோம்

சாரணியத்தை நாம் போற்றிடுவோம் - அது
சாற்றும் கருத்தினை ஏற்றிடுவோம்
சீருற வாழ்க்கை அமைவதற்கே - அது
சீரிய மார்க்கம் அமைத்ததுவே.

பேடன் பவல் என்ற பேரறிஞன் - அன்று
பெரிதும் எடுத்த முயற்சியினால்
நாடெங்கும் இன்று வளர்ந்ததுவே - இதை
நாவாரப் போற்றி மகிழ்ந்திடுவோம்.

உண்மை உழைப்பு உதவி என்னும் - நல்ல
உயர்ந்த கருத்தினைக் கொண்டதுவே
திண்மை உறுதி மிகப் போற்றிடு - என்றும்
சீறார் பணிகளை ஆற்றிடுமே.

சாதி மதங்கள் கடந்ததுவாய் - எந்த
சமூகமும் வாழப் பணிபுரியும்
நீதி நிறைந்திட்ட சாரணியம் - இதை
நெஞ்சினில் ஏற்றி மகிழ்ந்திடுவோம்.

போற்றும் ஒழுங்கும் உடையதுவே - நீதி
புகழும் திறமும் உடையதுவே
ஆற்றல் மிகவும் உடையதுவே - இந்த
அணியின் சிறப்பினைப் போற்றிடுவோம்.

ஆக்கம் :

Mas. A. Arulkumaran (2000 A/L)

CITY TELECOM & COMPUTER SERVICE

Local , IDD & Fax Service

Local – 021 – 2104 – 2104 & 2608

Foreign – 0094-21-2104

No-11, Parameswara Junction
Thirunelvely Jaffna.

அசல் 22 கரட் நவீன டிசைன் நகைகளுக்கு

# பிருந்தா ஜுவல்லர்ஸ்

பிருந்தா ஜுவல்லர்ஸ்
301, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Birunthа Jewellers
301, Kasthuriyar Road,
Jaffna.

# JAFFNA CERAMICS

**Wholesale & Retail Dealers in all ceramic wares,**
**S- lon pipes & fittings.**

**N0 – 2 –C , Stanley Road**
**Jaffna.**

உங்களுக்கு தேவையான எஸ்- லோன் பைப் வகைகள்,
பீங்கான் பொருட்கள், குளியலறைச் சாதனங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

யாழ்ப்பாணம் செரமிக்ஸ்
இல-2-c, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

தரமான 22 கரட் நகைகளுக்கு

# தனுஜா நகை மாளிகை

190/2 கஸ்தூரியார் வீதி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

* ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்*

# வீனோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்

அசல 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொபேசி\ பக்ஸ் ஶ்ரீ 021-2824

**Vono Nakai PoonKa**
**Gold 8 Jewel Merchant**
**185,Kasthuriar Road, Jaffna Tel/Fax – 0021-2824**

# உத்தம சாரணராவீர் நீவிர்

இன்றைய சாரணர் ஏற்கும் பணிகள்
அன்பும் சாந்தியும் அமைதியும் காத்திட
என்றும் இன்பமே சூழ நடத்துக!
நன்று மக்களை நல்வழி செலுத்துக!

கடமை கண்ணியம் கட்டுப் பாடு
உடமை உங்களுக் கென்ற உணருக!
இடமும் காலமும் அறிந்து செயல்களை
திடமாய்ச் செய்து சிறப்புப் பெறுக!

உனது கௌரவம் இறைபணி நாடு
மனது இன்புறக் கண்ணியம் காப்பது
எனவே எழுவிழி காரியம் முடித்திடு
உணர்வில் மனித நேயம் மலர்த்திடு

போரின் கொடிய தாக்கம் மக்களை
ஊர்கள் தோறும் அலைத்து உலைக்குது
வாரும் மக்கள் அவலம் துடைமின்
கூடும் துன்பம் ஏழ்மை குறைமின்

சத்திய வாக்காய் இதனைக் கொள்மின்
எத்திசை தோறும் எடுத்துச் சொல்மின்
நித்தியம் தயாராய் நின்று உழைமின்
உத்தம சாரணர் நீவிர் ஆவீர்

*ஆக்கம் : செல்வன் கு. மங்களேசன்*
*12 E 2000 கலைப்பிரிவு*

# நெஞ்சினில் என்றும் பசுமையாக

0.0.0.0.0

அனைத்து மனித உள்ளங்களையும் கவரும் எழில்மிகு கண்டி மாநகரினை நேரில் கண்டு களிப்புறும் வாய்ப்பை சாரணர் நாம் பெற்றுக் கொண்டோம். கண்டி மாநகரின் பரந்து கிடந்த பல்லேகலகம் உதாவ மைதானத்தில் 1998 மாசித் திங்கள் 17ம் நாள் தொட்டு 23ம் நாள் வரை ஜம்போறி (5ம் வருட சாரணர் ஒன்றுகூடல்) விழா ஒரு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழ்ந்த எமக்கு, தமிழன் என்ற ஒரு காரணத்தினால் யாழ் நகரை விட்டு அசைய முடியாத நிலையில், கனவிலும் காணாத நிகழ்வு கிடைத்ததையிட்டு நான் பேருவகை அடைகிறேன். தமிழ்த்தாயின் மைந்தர்கள் எம் காலடி பட கண்டி மாநகரம் என்ன தவம் செய்ததோ யான் அறியேன். அவ்விழாவிலே சாரணர் என்ற வகையில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டேன். யுத்த மேகம் சூழ்ந்திருக்கும் வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள அந்நியப்பட்டிருந்த மாணவர்கள் கண்டியில் தெற்கு மேற்கு மாணவர்களுடன் ஒன்றிணையும் பேறைப் பெற்றனர். காலா காலமாக ஜம்போறி விழா நடைபெறுவது வழக்கம். ஆனால் இம்முறை இவ்விழா எம்மால் சிறப்புப் பெற்றிருந்ததை குறிப்பிடத்தான் வேண்டும். அதுவும் இலங்கை அந்நியராட்சியிலிருந்து விடுதலை பெற்று பொன்விழாவைக் கொண்டாடும் வேளையில் இலங்கை மாதாவின் புதல்வர்கள் ஒன்று சேர்ந்தமை சிறப்பானதே. "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பதை ஜம்போறி பொறித்துச் சென்றது.

"காட்டின் ராஜா சிங்கம், அதுபோல் வனத்தின் ராஜா AIR LANKA" இது என் கூற்றல்ல. விளம்பரம் செய்யப்பட்ட போது தென்றலினூடே வந்து என் செவியை அடைந்த கூற்று. கேட்டதின் பின் உணர்ந்தேன். கர்ஜிக்கும் வெட்ட வெளி விண்ணிலே, காற்றைக் கிழித்தபடி எம்மைச் சுமந்த வண்ணம் விமானம் இரத்மலானை நோக்கிப் பயணமானது. பிரபஞ்சத்தின் இயற்கை உணர்வை அன்று தான் அனுபவித்தேன். "தேசப் படம் என்பது ஆகாயத்திலிருந்து ஒரு பறவை பார்க்கும் பிரதேசமாகும்" அதனைப் பாடத்தில் படித்தேன், அன்றுதான் நேரில் பார்த்தேன். தீவுக் கூட்டங்களும், நீர்ப் பரப்புக்களும், முட்புதர்களும், பசும் சோலைகளும், குட்டிக் குட்டைகளும் குன்றுகளும், நீரோட்டங்களும், நெடுஞ்சாலைகளும், அதில் ஊரும் வாகனங்களும் இலங்கை மாதாவின் எழிலை மிகைப்படுத்தி இருப்பதை என் கண்ணாரக் கண்டேன். "முதற்பயணம் கவனம்" இது என்னிடம் கொண்ட பாசத்தால் என் அம்மா கூறியது. ஆனால் இப்பயணத்தின் போது அம்மா சொன்ன வார்த்தையை மறக்கடிக்கச் செய்தது இக்காட்சிகள். வைரமுத்து என்னருகில் இருந்திருந்தால் நிச்சயம் கவிபாட வைத்திருப்பேன். இவற்றோடு என்மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது இந்நிகழ்வு. இரவோடு இரவாக கொழும்பிலிருந்து கண்டி நோக்கிய பயணம், தலதா மாளிகையை அண்மித்த வேளை வாகனத்தில் தொழில்நுட்பத்தின் கோளாறு காரணமாக பயணம் தடைப்படுகிறது. அதுவும் பொழுதோ நள்ளிரவு இடமோ நடுத்தெரு. அந்நியமொழி தெரியாத, புரியாத இடத்தில் என்ன செய்ய? ஏது செய்ய? பொலிசாரைச் சந்தித்ததும் அந்த இடத்திலே துண்டு விரித்துப்படுத்ததும் மறக்க முடியாத நிகழ்விலே ஒன்றாகி விட்டது.

கம்உதாவ மைதானத்தின் நுழைவாயிலில் யுத்தகால தொழிலில் ஒன்றான சோதனையிடல். எம்மை யாரும் விஞ்ச முடியாது என்ற தோரணையில் ஆயுதம் தரித்த காக்கிச் சட்டைக்காரரின் செயற்பாடுகள், எங்கே எங்களிடம் சிறு குறை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்ற தோரணையில் சகலதையும் காட்டி விட்ட பெருமிதத்தில் நாம் இவை யாவும் கடந்து இப்போது உங்களை மைதானத்துள் அழைத்துச் செல்கிறேன் தொடர்ந்து வாருங்கள் கொழும்பிலே மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் பார்த்த நான் இங்கே வானுயர்ந்த வளம் நிறைந்த மலைச் சாரலையும், அதன் இயற்கை அழகையும் கண்ணுக்குள் வாங்கிக் கொள்கின்றேன்.

இலங்கை வளத்தைப் பாடத்தில் கற்றுக் கொண்ட நான் நேரே காட்சியையும் கண்டு கொள்கின்றேன். எனது கமறாக் கண்ணை ஆங்காங்கே அமைக்கப்பட்ட கூடாரங்களை நோக்கித் திருப்புகின்றேன். நாட்டு வாழ்க்கையில் பரீட்சயமானவர்களைக் காட்டு வாழ்க்கையையும் பரீட்சிக்கவே கூடாரங்கள் அமைக்கப் பட்டிருந்தன போலும். கூடாரத்தைச் சுற்றிக் காவல் எல்லைகள் யாம் மைந்தரை எதிர்பார்த்து இருப்பவர் போல் அமைக்கப்பட்ட கூடாரங்கள் உங்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று கூறும் வகையில் எம்மால் அமைக்கப் பட்ட கூடாரங்கள் காட்சி தந்தன. காட்சிகள் பலவற்றைக் கண்ணுள் வாங்கிய எனக்கு பல சம்பவங்களும் அனுபவங்களும் கருத்திற்குக் கிடைத்தன. அன்று தான் எங்கள் மூதாதையர்களின் சைகை மொழிகளை அனுபவபூர்வமாக அறிந்து கொண்டேன்.

தொங்கு பாலங்கள், கயிற்றுப் பாலங்கள், உயரமான காவற் கோபுரங்கள், மரங்களில் காவற் குடிசைகள், நுட்பமான வேலைப்பாடுகளுடைய நுழைவாயில்கள் இவை அவ்வப்போது யாம் மண்ணில் பெருமிடங்களை ஆதிக்கம் செலுத்தும் காக்கிச் சீருடையினரது தடைமுகாம்களை ஞாபகப்படுத்தின. கூடாரங்கள் அனைத்தும் சகல வசதிகளும் கொண்டு விளங்கின. விழாவிற்கு ஒளியூட்டியும் என்னை வியப்பில் ஆழ்த்தியதுமான தீப்பாசறை, பல யானைகளில் அலங்கரித்த வண்ணம் பண்டைய மன்னர்களின் வருகை, பிரித்தானிய அதிபரை வரவேற்றமை, வேடுவர் போன்று வேடம் அணிந்த சாரணரது ஆடல் பாடல்கள், கயிற்றில் நடந்த வண்ணம் தீப்பந்தத்தைப் பற்ற வைத்தல் போன்றவை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாயின.

என் பார்வையினை அப்பால் செலுத்துகின்றேன். ஹெந்தனை மலை ஏறல், கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் என்பனவும் என்மனதில் ஆழப் பதிந்தன. பல்லேகல திறந்த சிறைச் சாலையைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கேற் பட்டது. கைதிகளது நாடகம் ஒன்றினையும் காணும் பேறும் எமக்குக் கிடைத்தது. காவற்றுறை அதிகாரி எம்முடன் அன்புடனும் ஆவலோடும் அளவளாவியதைக் கண்டு இத்தகையோர் என்றும் இப்படியே எம்முடன் உறவாட வேண்டும் என மனதினுள் பிரார்த்திக்கின்றேன். சாரணர் ஆகிய நாம் பல அறிவை, திறன்களை நன்மனப் பாங்குகளை பெற இந்த ஜம்போறி அமைந்தது என்பதில் ஐயமில்லை.

“ஜம்போறி ஜம்போறி 5ம் இலங்கை ஜம்போறி” என்ற பாடல் வரியும் தேசிய கீதமும் மதமொழி பேதமின்றி சமரசமாய் ஒலித்தது. அதுவே ஒவ்வொரு மனித நன்மனங்களின் சமரசத்திற்கு சான்று பகர்கின்றது. சொல்லில் வடித்துப் புரிய வைக்க முடியாத பலவற்றை அனுபவத்தின் மூலம் பெற்றாலே புரிய முடியும். நானும் என்னால் இயன்றளவிற்கு என் அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். யான் பெற்ற உவகை பெறுக என் சகோதரர். எம்மைச் சூழ்ந்து நிற்கும் யுத்த மேகங்கள் விலகி ஈழ மாதாவின் சாரணர் நாம் ஒன்று கூடி ஒற்றுமையாய் செயலாற்றி சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்வதே ஆனந்தம் என்ற உயரிய நோக்குடன் வீறுநடை போடுவோமாக.

“மனதிலுறுதி வேண்டும்
வாக்கினில் இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
காரியத்திலுறுதி வேண்டும்;”

*ஆக்கம் : த. ஸ்ரீபிரகாஸ்*
*(கலைப்பிரிவு)*
*(குழுச் செயலாளர்)*

# சாரணர் பட்டியல்

குழுத் தலைவர் : செல்வன் அ. நித்தியநர்மதன்

## கிளி அணி

1) செல்வன் த. ஸ்ரீபிரகாஷ் (P.L)
2) செல்வன் ந. றொமேஸ்குமார் (Apl)
3) செல்வன் அ. அருள்மைந்தன்
4) செல்வன் தே. யசிதரன்
5) செல்வன் யோ. கோபிநாத்
6) செல்வன் அ. அனுஷாந்தன்

## கொக்கு அணி

1) செல்வன் மு. உதயகரன் (P.L)
2) செல்வன் கு. சுதர்சனன் (Apl)
3) செல்வன் ம. கிருஷானந்தன்
4) செல்வன் சி. சபேசன்
5) செல்வன் பா. தீபன்
6) செல்வன் டேவிற்டிவின்டன்
7) செல்வன் சோ. ஜெயமுதல்வன்

## மயில் அணி

1) செல்வன் கு. மனோதரன் (P.L)
2) செல்வன் த. தவநிதி (Apl)
3) செல்வன் செ. ஜெயகணேஷ்
4) செல்வன் சி. சுரேஷ்குமார்
5) செல்வன் கு துவாரகன்
6) செல்வன் இ. ராகுலன்
7) செல்வன் கி. டயஸ்டிலாக்ட்

## மைனா அணி

1) செல்வன் க. வசிகுமார் (P.L)
2) செல்வன் க. வாசுதேவன் (Apl)
3) செல்வன் க. செந்தூரன்
4) செல்வன் கு. மங்களேசன்
5) செல்வன் பா. கிருஷாந்தன்
6) செல்வன் க. மதுசூதனன்
7) செல்வன் இ. தர்சன்

## குயில் அணி

1) செல்வன் மு. சயந்தன் (P.L)
2) செல்வன் க. கதிரனுஷன் (Apl)
3) செல்வன் ப. பரணிதரன்
4) செல்வன் ச. கஜேந்திரன்
5) செல்வன் க. சுமணன்
6) செல்வன் பா. சாரங்கன்
7) செல்வன் ஆ. விஜயதர்சன்

## வானம்பாடி அணி

1) செல்வன் நா. டிசாந்தன் (P.L)
2) செல்வன் ச. விஜிந்தன் (Apl)
3) செல்வன் போ. அசோக்
4) செல்வன் ஸ்ரீ. மதனதீபன்
5) செல்வன் ப. ரேனுகாதரன்
6) செல்வன் ச. தீசன்
7) செல்வன் க. சுனில்சுவாஸ்தர்

**வாத்து அணி**

1) செல்வன் ஜெ. நிரோஷ் (P.L)
2) செல்வன் யோ. புருஷேத்மன் (Apl)
3) செல்வன் தி. சௌந்தர்
4) செல்வன் சோ. செந்தூர்வாசன்
5) செல்வன் இ. ஜானகிராம்
6) செல்வன் ந. சுபாசுதன்
7) செல்வன் ச. ஸ்ரீஜெயன்

**சிட்டுக்குருவி அணி**

1) செல்வன் க. கஜனன் (P.L)
2) செல்வன் சி. மயூரன் (Apl)
3) செல்வன் சி. ஆதித்தன்
4) செல்வன் சி. வாகீசன்
5) செல்வன் ந. தேவரூபன்
6) செல்வன் இ. ஜெகன்

**திரிசாரணர்**

1) செல்வன் வ. குருபரன்
2) செல்வன் ச. கிருபாகரன்
3) செல்வன் அ. அருள்குமரன்
4) செல்வன் பொ. துவாரகன்

## கண்டி பல்லேகலவில் நடைபெற்ற 5 ஆவது தேசிய ஜம்போறியில் கலந்து கொண்டவர் விபரம் :

1) திருமதி சௌ. சச்சிதானந்ததாஸ்
2) திருமதி ந. கமலநாதன்
3) செல்வன் அ. நித்தியநர்மதன்
4) செல்வன் த. ஸ்ரீபிரகாஷ்
5) செல்வன் ந. கஜனன்
6) செல்வன் கு. மனோதரன்
7) செல்வன் ஜெ. நிரோஷ்
8) செல்வன் கு. சுதர்சனன்
9) செல்வன் ந. டிசாந்தன்

# DISTRICT COMMISIONER'S CORD

## மாவட்ட ஆணையாளர் நாடா

*(12 – 17 வயது வரை)*

### *அ) பொறுப்பு (COMMITMENT)*

**(1) சேமிப்பு**

தொடர்ச்சியாக சேமிப்புக் கணக்கினைப் பேணி வருதல்.

**(2) குறிப்புப் புத்தகம்**

சகல சாரணிய முயற்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் குறிப்பு, பதிவு, தகுதிகாண் சின்னம், விருதுகள் பெறும் பரீட்சையின் போது பார்வையிடப்படும்.

**(3) அணி**

**அணி குறிப்புப் புத்தகம் (பதிவேடு)**

பாசறை அமைத்தல், நீண்டதூரக் காட்டுப் பயணம், விருதுகள் தொடர்பான புதிய நல்ல சிந்தனைகள், புகைப்படம், சமையல் வழிகாட்டல், கவிதை பாடல், புதினப் பத்திரிகைச் செய்திச் சேகரிப்பு என்பன இதனுள் அடங்கும்.

### *ஆ) பண்பு (CULTURE)*

மிகவிருப்பமுள்ள பொழுது போக்கினை கீழே தரப்பட்ட உதாரணங்களுக்கு அமைய ஒன்றைத் தெரிவு செய்து அச் செயலில் ஆர்வத்தோடு 3 மாதங்களுக்குக் குறையாமல் செயற்பட வேண்டும்.
பாண்டு வாத்திய குழு பாடல் குழுவில் இணைந்து பாடல், சித்திரவட்டம், எழுத்தாளர் வட்டம், கைத்தொழில் பயிற்சி வகுப்புக்கள், நாடகக் குழுவில் இணைந்து நடித்தல்.

### *இ) சாரணர் கைத்திறன்*

கீழ்வருவனவற்றில் தகமை பெற்று இருத்தல் வேண்டும்.

**1) முடிச்சுக்கள்**

- ❋ தீயணைப்போன் முடிச்சு ❋ நாற்காலி முடிச்சு ❋ உருளும் முடிச்சு

**2) தீப்பற்ற வைக்கும் முறை**

- ❋ வண்டிக்காரன் தீ / நாடோடித் தீ
- ❋ நட்சத்திரத் தீ
- ❋ முக்கரிலித் தீ
- ❋ பிரதித் தீ
- ❋ பாதுகாப்புப் பள்ளத் தீ
- ❋ மறுதலிப்புத் தீ

3) முன்னோடி வழியாக்கல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் வழிகாட்டியாக இருத்தல், பயிற்சியில் ஈடுபடுதல் பாலம் அமைத்தல், கூடாரம் அமைத்தல், பாசறைக்கு வேண்டிய பொருட்களை அமைத்தல், பிரயோசனப் படுத்துதல்.

4) அடிச்சுவடுகள்

மண்ணில் சாதாரண அடிச்சுவடுகளைப் பின்பற்றுதலும், அதனை விளங்கிக் கொள்ளுதலும்.

5) வரைபடம் வரைதல்

அளவுத் திட்டத்துடன் திசையறிகருவியின் உதவியுடன் வரைபடம் வரைதல், குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

6) மதிப்பீடு செய்தல்

உயரம், நீளம், தொகை, நிறை ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்.

7) கோடரி, வாள், மரச்சுத்தி

பாவனை செய்யும் முறையையும், பாதுகாக்கும் முறையினையும் தெரிந்திருத்தல்.

8) 10 இன பறவைகளை அறிதல்

10 இன பறவைகளை இனங் காணல், நிறம், பருமன், அவற்றின் பழக்கவழக்கம் முதலியவற்றை அறிந்திருத்தல்.

9) நீச்சல்

35 மீற்றர் நீந்தத் தெரிதல்
நீந்த முடியாத உடல் நிலை உள்ளவர் மாவட்ட ஆணையாளரின் விசேட அனுமதியுடன் விளையாட்டு வீரன் (கனிஸ்ட / சிரேஸ்ட) அல்லது தோட்டக் காரன் பகுதியில் ஓர் சின்னம் எடுத்தல் வேண்டும். தோட்டக்காரன் சின்னத்திற்குப் பதிலாக கடற்சாரணர், கடல் வீரன் பகுதி / விமானச் சாரணர் விண்வெளி வீரன் பகுதியிலும் சின்னத்தை எடுக்கலாம்.

## ஈ) ஆரோக்கியம் (HEALTH)

### அணிநடை

1) 200 மீற்றர் குழுவுடன் அணிநடை செய்தல்.

2) சிரமமான முயற்சிகள்

உடல் வலிமையை கொடுக்கக் கூடிய கீழ்வரும் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்தல்.
சுவாசிக்கும் தன்மை, வளையும் தன்மை, சுவட்டு மைதான விளையாட்டு, மல்யுத்தம், யூடோ, கராட்டி, நடனம், நீந்துதல், பாரம் தூக்குதல்.

3) சமூக சுகநலப் பழக்கவழக்கங்கள்

சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் புகைத்தல், மது அருந்துதல், போதை வஸ்த்திற்கு அடிமையாதல் என்பவற்றில் ஏற்படும் தீமைகள் பற்றித் தெளிவாக அறிந்திருப்பதுடன், ஏனையோருக்கும் அறிவுரை கூறுதல், இது தொடர்பான குறிப்புக்களை குறிப்புப் புத்தகத்தில் பேணல்.

## உ) சமூகம் (SOCIETY)

1) வீதி ஒழுங்கு முறைகளையும், குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

2) தனது வீட்டைச் சுற்றியுள்ள சூழலைப் பற்றிய ஆய்வுடன் கூடிய அறிவு இருத்தல் வேண்டும். சமூகத்தின் தேவையில் முக்கியத்துவம் பெறும் இடங்களை அறிந்திருத்தல். (பாடசாலை, வைத்தியசாலை, தபாற் கந்தோர், பஸ்தரிப்பு நிலையம் போன்றவை)

## ஊ) துணிகரச் செயல் (ADVENTURE)

1) ஏழு இரவு பாசறை வாசம் செய்திருத்தல்

2) கால்நடைப் பயணம் 22 கி.மீ. செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

## எ) தகுதிகாண் சின்னங்கள் (PROFICIENCY BADGES)

கீழ்க்குறிப்பிடப்பட்ட பகுதிகளில் நான்கு சின்னங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

1) மகிழ்ச்சி மிகு குடும்பம்
2) பாசறைத் திறன் பகுதியில் களஞ்சியப் பொறுப்பாளர் தவிர்ந்த ஏனைய சின்னங்களில் ஒன்று.
3) சுகாதார சேவையாளன் / பொதுச் சுகாதாரம்
4) முதலுதவியாளன் / அம்புலன்ஸ்

## ஏ) சேவை (SERVICE)

1) சாரணர் விருது பெற்று ஒன்பது (9) மாதகாலச் சேவை
2) பதிலீட்டுச் சாரணர் விருது மட்டும் பெற்றிருந்தால் 14 வயது முடிந்து 9 மாத கால சேவை

## ஐ) தகமை (ELIGIBILITY)

1) சாரணர் விருதினைப் பெற்றிருந்தால் 12 வயது முடிந்த பின்னர் மாவட்ட ஆணையாளர் நாடாவிற்கான செயற்பாட்டில் ஈடுபடல்
2) பதிலீட்டுச் சாரணர் விருதினை மட்டும் பெற்றிருந்தால் 14 வயது முடிந்த பின்னர் அடுத்த விருதிற்கான செயற்பாட்டில் ஈடுபடுதல்.
3) மாவட்ட ஆணையாளர் நாடா பெறக் குறைந்தது 13 வயது இருத்தல் வேண்டும்.

## 01. 1.1 சுய குறிப்புப் புத்தகம்

சகல தேவையான அறிக்கைகளும், தொடர்ச்சியான நடவடிக்கைகளும் குறிப்பில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இதில் தகுதிகாண் சின்னத்தினையும் விருதினையும் பெறுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட பரீட்சைகள் இடம் பெற்றிருத்தல் வேண்டும். சுய குறிப்புப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த பதிவுகளைக் கொண்டு குறித்த மாணவன் சாரணியத்தில் என்ன தகுதியினை அடைந்துள்ளான் என்பதை அறியக் கூடியதாக இருக்கும்.

### 1.2 அணிக் குறிப்புப் புத்தகம்

அணிக் குறிப்புப் புத்தகம் என்பது அணியினைப் பற்றியும் அணியின் நடவடிக்கைகள் பற்றியும் கூறுவது. அதில் அணியினால் மேற்கொள்ளப்பட்ட பாசறை, நடைப்பயணம், நற்செயல்களினால் கிடைக்கப் பெற்ற விருதுகள், புதிய எண்ணங்கள், செய்முறைகள், புகைப்படங்கள், வரைபடங்கள், கவிதைகள், பாடல்கள், புதினப் பத்திரிகையில் வெட்டிச் சேகரித்தவை போன்றவற்றின் பதிவுகள் காணப்படல் வேண்டும்.

## *02. பண்பு*


### 2.1 பொழுது போக்கு

கீழே தரப்பட்டுள்ள பொழுது போக்குகளில் ஒன்றைத் தெரிவு செய்து அதில் ஆர்வத்துடன் மூன்று மாதத்திற்குக் குறையாமல் ஈடுபடல், பாண்டு வாத்தியம், குழுப்பாடல், பாடல் குழுவில் இணைந்து பாடல், சித்திர வட்டம், எழுத்தாளர் வட்டம், கைவேலை வகுப்பு, நாடகக் குழு, பட்டிமன்றம் போன்றன.

## *03. சாரணர் கைத்திறன்*

### 3.1 கட்டுக்கள்

### *01 குதிரைக் கட்டு / வழிப்போக்கன் முடிச்சு Highwayman's hitch*




இம்முடிச்சு மரத்தில் இட்டுப் பாதுகாப்பாக இறங்கிய பின் கீழ் இருந்தே கயிற்றை இழுத்துக் கயிற்றைப் பெறுவதற்கு உதவுகின்றது.


### *02. தீயணைப்போன் நாற்காலி முடிச்சு Fireman's Chair Knot*



இது உயரத்தில் இருந்து அபாயத்திற்குள்ளானவரைப் பாதுகாப்பாக கீழே இறக்கப் பயன்படும் முடிச்சாகும்.




### *03. உருளும் முடிச்சு (Rolling Hitch)*




முளைத்தும்புக் குழைச்சுக்கும், இணை வரி முடிச்சுகளுக்கும் பதிலாக இம்முடிச்சினை உபயோகப்படுத்தலாம்.

04. இரட்டைத் துணிக்கட்டு
**Double Sheet Bend**




வித்தியாசமான பருமன்களை உடைய அல்லது ஈரமான கயிறுகளை இணைக்கும் போது இதன் வழுக்கும் தன்மையை நீக்க இன்னொரு வளையமிட்டு இந்தக் கட்டைப் பலப்படுத்துகின்றோம். இதனால் தான் துணிக் கட்டுக்குப் பதிலாக இந்த இரட்டைத் துணிக் கட்டை உபயோகிக்கின்றோம்.

05. சுருக்கு வளையக் கட்டு
**Bowline on bight**




வளையக் கட்டை ஒத்த பலமிக்க இரு வளையங்களைக் கொண்டு போடப்படும் முடிச்சு இதுவாகும்.

3.2 தீ மூட்டும் முறைகள்



GIPSY FIRE
முக்காலித் தீ




REFLECTOR FIRE
மறுதலிப்புத் தீ




STAR FIRE
நட்சத்திரத் தீ




HUNTERS FIRE
வேட்டைக்காரன் தீ



CRENE FIRE
தூக்குத் தீ



BRIDGH FIRE
பாலத் தீ



ALTAR FIRE
பிரதித் தீ




TRENCH FIRE
பாதுகாப்பான பள்ளத்தாக்குத் தீ




NOMAD FIRE
நாடோடித் தீ / வண்டிக்காரன் தீ

## 3.3 முன்னோடிச் செயற்பாடுகள்

1) படத்தில் காட்டப்பட்டுள்ள முன்னோடிச் செயற் திட்டங்களில் ஏதாவது ஒன்றில் பங்கு பற்றல்



2) குடிசை அமைக்கத் தெரிந்திருத்தல்



## 3.4 அடிச் சுவடுகள்

சாரணர் தகவல்களை அறியும் முக்கிய வழிகளில் ஒன்று அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் ஆகும். இது மிகவும் உபயோகம் உள்ள பழக்கமாவதுடன் மிகவும் சலிப்புத் தரும் பயணத்தையும் உற்சாகமுள்ளதாக மாற்றும். இதற்கு இதனைச் சிறு வயது முதலே ஆரம்பித்தல் வேண்டும்.


ஒரு தடவை ஒரு அடிச்சுவட்டை உற்றுப் பார்த்தவுடன் அச்சுவட்டுக்குரியவன் என்ன வேகத்தில் நடந்திருக்க வேண்டும் என அறிய சாரணன் கற்றிருத்தல் வேண்டும்.

ஒரு மனிதன் நடக்கும் போது ஒவ்வொரு பாதமும் மற்றதிலிருந்து ஒரு யார் தூரத்திற்குச் சிறிது குறைவாக இருக்கக் கூடியதாக முழுப் பாதமும் தரையில் படும்படி நடப்பான். ஓடும் பொழுது விரல்கள் தரையில் ஆழமாகப் பதிந்திருப்பதுடன் தரையில் துகள்கள் சிறிது மேலே கிளம்பியும் இருக்கும். பாதங்களுக்கு இடையே உள்ள தூரம் ஒரு யாருக்கு மேற்பட்டிருக்கும். சுவடு பின்பற்றுவோரை ஏமாற்றுவதற்காக மனிதர் சிலர் பின்புறமாக நடப்பதுமுண்டு. ஆனால் உண்மையில் முறைப்படி பயிற்சி பெற்ற திறமையுடைய சாரணன் அவ்வடிச் சுவடுகள் குறுகியதாகவிருப்பதைக் கொண்டும் விரல்கள் உட்புறமாக அதிகம் சாய்ந்திருப்பதைக் கொண்டும் குதி மிகவும் அழுத்தி வைக்கப் பட்டிருப்பதைக் கொண்டும் இதனை உடனே கூறி விடுவான்.


மிருகங்களைப் பொறுத்த வரையில் வேகமாக ஓடிச் செல்லும் போது அவற்றின் விரல்கள் தரையில் அதிக ஆழமாகப் பதிவதுடன் அவை தரையில் அதிக தூசுகளையும் கிளப்பி விடுகின்றன. மெதுவாக நடக்கும் போது இருக்கும் அடிச்சுவடுகளிலும் பார்க்க, ஓடும் போதுள்ள அடிச்சுவடுகள் மிக நீண்டவையாக இருக்கும். இதனைப் போல் சாதாரண மிருகங்களின் அடிச்சுவடுகளைப் பார்த்து எந்த மிருகத்தின் அடிச்சுவடு என்பதைக் கூறக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதனை கடற்கரைக்குச் சென்று பிளாஸ்டர் ஒவ் பரிஸ் கொண்டு செயல்முறையில் செயற்படுத்தல் வேண்டும்.

### மனிதனின் அடிச்சுவடுகள்

நடந்து சென்ற போது



ஒரு பக்கம் பாரம் சுமந்து சென்ற போது



ஓடிச் சென்ற போது



அடிப்பாதத்தால் நடந்த போது



பார்வையற்ற ஒருவன் நடக்கும் போது அவரின் அடிச்சுவடு பின்வருமாறு இருக்கும்

துவிச்சக்கர வண்டி ஒன்று சென்ற திசையைப் படம் குறிக்கின்றது. மண் பின்னால் வீசப்பட்டதை அவதானிக்குக.




## 3.5 வரைபடம் வரைதல்

சரியான அளவுத் திட்டத்தில் குறியீடுகளைப் பயன்படுத்தி திசையறி கருவியின் உதவியுடன் வரைபடம் வரைதல் (தேசபடச் செய்முறை குறியீடுகளை அவதானிக்குக.)

## 3.6 மதிப்பிடல்

உயரம், நீளம், எண்ணிக்கை, நிறை ஆகியவற்றை மதிப்பீடு செய்யத் தெரிந்திருத்தல்.


### அ) ஆற்றின் அகலத்தை அறிதல்




ஆற்றின் மறுகரையில் இருக்கும் ஒரு பொருளை (O) எனக் குறித்துக் கொள்க. பொருளுக்கு நேர் எதிரே நிற்கும் இடம் (A) அதில் இருந்து செங்கோணத்தில் ஏதாவது ஒரு பக்கத்திற்கு சிறிது தூரம் நடந்து இதில் ஓர் தண்டத்தை (B) நாட்டல். பின் அதே அளவு தூரம் தொடர்ந்து நடந்து இன்னொரு தண்டத்தை (C) நடல். அதில் இருந்து செங்கோணத்தில் O, B ஒரே நேர் கோட்டில் வரும் வரை நடந்து அவ்விடத்தை அடையாளம் (D) செய்தல்.

வரைபடம் ABO, BCD இரண்டும் ஒருங்கிசைபவையாதலால் CD = AO. ஆற்றின் அகலம் CD இன் அளவு ஆகும்.

### ஆ) மரத்தின் உயரத்தை அளத்தல்



சீரான அளவு குறிக்கப்பட்ட சாரணர் தண்டத்தை எடுத்து நிலத்தில் (Q) ஊன்றுக. நில மட்டத்தில் பார்வையை சீர் செய்து (P) மரத்தின் நுனியும் (T) கோலின் நுனியும் (R) ஒரே நேர்கோட்டில் அமையக் கூடியதாக சீர் செய்க. பின்னர் சாரணர் தண்டத்திற்கும் மரத்திற்கும் இடைப்பட்ட தூரத்தினையும் (A), சாரணர் தண்டத்திற்கும் பார்வை மையத்திற்கும் இடைப்பட்ட தூரத்தினையும் (C) அளத்தல். சாரணர் தண்டத்தின் உயரம் (B) எனின் முக்கோணி PQR, PST க்கு ஒரே கோணம் RPQ ஆகையால்,

தான்சன் விதிப்படி

$$\frac{B}{A} = \sqrt{(A + C)}$$

$$X \text{ (மரத்தின் உயரம்)} = \frac{B(A + C)}{A}$$


இ) நிறை, எண்ணிக்கை மதிப்பிடல்

1) மதிப்பிடுவதன் மூலம் நிறையைக் கூறத் தெரிதல் வேண்டும். ஒரு கிராம் நிறையுள்ள கடிதம், ஒரு கிலோ நிறையுள்ள உருளைக் கிழங்கு, ஒரு சாக்கு தவிடு ஆகியவற்றின் நிறைகளை மதிப்பிட்டுக் கூற வேண்டும். ஒரு மனிதனைப் பார்த்து அவனது நிறையை மதிப்பிட்டுக் கூறத் தெரிதல் வேண்டும். இவற்றைப் பயிற்சியின் (அனுபவத்தின்) மூலம் தான் பயில வேண்டும்.

2) எண்ணிக்கைகளை மதிப்பிட்டுக் கூறத் தெரிய வேண்டும். ஒரு கூட்டத்தில் அல்லது பேருந்தில் எத்தனை பேர் உள்ளனர் என்று ஒரே பார்வையில் மதிப்பீடு செய்யத் தெரிய வேண்டும். ஒரு மந்தையில் எத்தனை ஆடுகள் / மாடுகள், ஒரு தட்டில் எத்தனை பழங்கள் / இனிப்பு என மதிப்பிட்டு சொல்லத் தெரிதல் வேண்டும். இதனையும் பயிற்சியின் மூலம் தான் பயில முடியும்.

## 3.7 கோடரி, உள்ளாழி, வாள், மரச் சுத்தியல்


அ) கோடரி



**பாவனை செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டியன.**

1) கோடரியை சுற்றும் அளவு பிரதேசத்தில் எவரும் நிற்றல் அல்லது தடையிருத்தல் ஆகாது.
2) ஓங்கிக் கொற்றும் போது மேல் தடை இருக்கக் கூடாது.
3) பால் மரத்தைத் தறித்தல் ஆகாது.
4) பொறுப்பாக வைத்து கொத்துதல் வேண்டும்.
5) பாவனை செய்யாத நேரத்தில் மரக்குற்றியில் கொத்தி வைத்தல் வேண்டும்.
6) பாவனை செய்யமுன்னும் பாவனையின் பின்னும் தீட்டுதல் வேண்டும்.

ஆ) உள்ளாளி வாளி (SAW)



இவ்வாள் சிறிய வேலைகள் செய்வதற்குச் சிறந்தது. கோடரியுடன் ஒப்பிடும் போது வெட்ட ஆரம்பிக்கும் போது மெதுவாக ஆரம்பித்து வெட்டு விழுந்தவுடன் தான் அழுத்தி வெட்டுதல் வேண்டும். வெட்டும் போது வாளை முன்னோக்கி (45°) அழுத்தி வெட்டுதல் வேண்டும்.

**வெட்டும் போது கவனிக்க வேண்டியன.**

1) பாவனை செய்யாத நேரத்தில் பல்லிற்கு எண்ணெய் பூசி மூடி வைக்க வேண்டும்.
2) வெட்ட முன்னும் வெட்டிய பின்னரும் கூராக்குதல் வேண்டும்.
3) வெட்டும் இடத்தை அவதானித்து வெட்டுதல் வேண்டும்.
4) வெட்டும் பொருளை பிறிதோர் மரத்தின் மீது வைத்து வெட்டுதல் வேண்டும்.
5) பால் வரும் மரங்களை வெட்டக் கூடாது.
6) உள்ளாழி வாளை வெட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

இ) மரச் சுத்தியல்



தச்சுத் தொழில் செய்பவரும், சிற்ப வேலை செய்பவரும் பாவனை செய்வர். சாரணர்கள் முன்னோடிச் செயற்பாடுகளின் போது பாவனை செய்வர். கூடாரம் அடிக்கும் போதும் பாவனை செய்வர்.

## 3.8 பறவைகள்

பத்து வெவ்வேறு இனப் பறவைகளின் நிறம், பருமன், ஆயுட்காலம், பழக்கவழக்கங்கள், இனம் பெருக்கம் செய்ய எடுக்கும் காலம் என்பவற்றை நன்கு அறிந்து அதன் படங்களைத் தினக் குறிப்பேட்டில் ஒட்டி இது பற்றி ஒரு சிறு அறிக்கை தயார் செய்ய வேண்டும்.

## 3.9 நீச்சல்

35 மீற்றர் நீந்தத் தெரிந்திருத்தல் வேண்டும். அல்லது மாவட்ட ஆணையாளரின் விசேட அனுமதி பெற்று விளையாட்டு வீரன் அல்லது சிரேஷ்ட விளையாட்டு வீரன் தகுதிகாண் சின்னம் பெற்றிருத்தல் வேண்டும். ஏற்கனவே இச் சின்னங்கள் பெற்றிருந்தால் அவைகளைச் சமர்ப்பித்தல் போதுமானது.

# 04. ஆரோக்கியம்

## 4.1 அணிநடை

200 மீற்றர் அணிநடை குழுவுடன் செய்தல் வேண்டும்.

## 4.2 தொடர்ச்சியான நடவடிக்கைகள்

சாரணர்களுக்கு உடல் வலிமையையும், மன வலிமையையும் அளிக்கத் தக்கவாறு பின்வரும் பயிற்சிகளைக் கிரமமாக மேற்கொள்ள வேண்டும். அவை பின்வருமாறு சுவட்டு மைதான விளையாட்டு, மல்யுத்தம், யூடோ, கராட்டி, நடனம், நீச்சல், பாரம் தூக்குதல், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கற், றகர், ஹொக்கி.

## 4.3 சமூக சுகநலப் பழக்கவழக்கங்கள்

சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய புகைத்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்து பழக்கத்திற்கு அடிமையாதல் என்பவற்றின் தீங்கு பற்றித் தான் தெளிவாக அறிந்து கொள்வதுடன் ஏனையோரையும் அதில் ஈடுபடவிடாமல் அறிவுரை கூறலோடு இதனைப் பற்றிய குறிப்பு சுய குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும்.

# *05. சமூகம்*

5.1 வீதி ஒழுங்கு முறைகளையும், குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும். தனது அணியில் உள்ளோருக்கு வீதி ஒழுங்கு முறையைக் கவனமாக அவதானிக்காது விடுவதினால் ஏற்படும் விளைவு பற்றி விளக்குவதோடு, மேலும் அதனைப் பற்றிய கருத்துரை ஒன்றும் வழங்குதல் வேண்டும்.

## வீதி ஒழுங்கு குறியீடுகள்
**(எச்சரிக்கை செய்யும் சமிக்கைகள்)**

1) முன்னால் வலப்பக்கமாக வளைவு ஒன்று உண்டு.



2) முன்னால் இடப்பக்கமாக வளைவு ஒன்று உண்டு.



3) முன்னால் வலப்பக்கமாக இரட்டை வளைவு ஒன்று உண்டு.



4) முன்னால் இடப்பக்கமாக இரட்டை வளைவு ஒன்று உண்டு.



5) வலமிருந்து பாதை ஒன்று இணைகின்றது.



6) இடமிருந்து பாதை ஒன்று இணைகின்றது.



7) முன்னால் குறுக்கு வீதி உண்டு.



8) முன்னால் மூன்று வீதிகளின் சந்தி ஒன்று உண்டு.



9) வீதி முன்னால் ஒடுங்குகின்றது.



10) இரட்டை வண்டிப் பாதை முன்னால் முடிவடைகிறது.



11) முன்னால் ஒடுக்கமான பாலம் உண்டு.



12) முன்னால் "T" வடிவச் சந்தி ஒன்று உண்டு.



13) முன்னால் சிறுவர் கடவை உண்டு.



14) முன்னால் பாதசாரிகள் கடவை உண்டு.




15) துவிச்சக்கர வண்டிக் கடவை முன்னால் உண்டு.



16) துவிச்சக்கர வண்டி ஒழுங்கை முன்னால் உண்டு.



17) பாதுகாப்பான புகையிரதக் கடவை முன்னால் உண்டு.



18) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால் உண்டு.




19) முன்னால் நிறுத்தவும்.



20) முன்னால் செல்ல வழி விடவும்.



21) சுற்றுப் பாதை ஒன்று முன்னால் உண்டு.



22) முன்னால் பாதையில் திருத்த வேலை நடைபெறுகின்றது.



23) அபாயகரமான சரிவுப் பாதை முன்னால் உண்டு.



24) முன்னால் கற்பாறைகள் விழும் அபாயமுண்டு.



25) முன்னால் பாதையை மந்தைகள் கடப்பதுண்டு.



26) வழுக்கு வீதி ஒன்று முன்னால் உண்டு.



27) சமிக்கை விளக்கு உண்டு.



28) முன்னால் ஓடத்துறை உள்ள வீதி.



## ஒழுங்கு படுத்தும் சைகைகள்
### (தடை செய்யும் சைகைகள்)

1) வாகனம் செல்லத் தடை



2) வலப்பக்கம் திரும்பத் தடை



3) இடப்பக்கம் திரும்பத் தடை



4) ஒலி எழுப்பத் தடை



5) "ப" முடக்குத் திரும்பத் தடை



6) வாகனங்கள் நிறுத்தத் தடை



7) லொறிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது



8) வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது



9) மோட்டார் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது



10) சகல வாகனங்களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது



11) முந்திச் செல்லத் தடை



12) வசு வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது



13) ஒற்றை நாட்களில் வாகனம் நிறுத்தத் தடை



14) இரட்டை நாட்களில் வாகனம் நிறுத்தக் கூடாது.



## பாதசாரிகளும் மிதி வண்டி ஓட்டுநர்களும் அனுசரிக்க வேண்டிய அறிவுறித்தல்கள்

### பாதசாரிகள்

1) நடைபாதை இருப்பின் அதனைப் பயன்படுத்தவும் இல்லாவிடின் வீதியின் வலப் பக்கமாக நடந்து செல்லுங்கள்.
2) வீதியைக் கடப்பதாயின் தகுந்த இடத்தில், தகுந்த முறையில் கடக்க வேண்டும்.
3) வெளிச்சம் குறைந்த நேரம், மழைக்காலம் ஆகிய நேரங்களில் மிக அவதானமாக இருத்தல் வேண்டும்.
4) பார்வையற்றோர், அங்கவீனர்கள், முதியோர்கள் ஆகியோருக்கு பாதையைக் கடப்பதற்கு உதவி புரியவும்.
5) விரையும் பேருந்து வண்டியில் ஓடி ஏறவோ, நிற்குமுன் பாய்ந்து இறங்கவோ முயல வேண்டாம்.
6) வீதியில் ஒன்று கூடி அல்லது விளையாடி சனநெருக்கடிக்குள்ளாக்காதீர்.

### துவிச் சக்கர வண்டி ஓட்டுநர்

1) துவிச்சக்கர வண்டியின் தரத்தையும், நிலையையும், துவிச்சக்கர வண்டியை ஓட்டும் திறனையும் உறுதிப்படுத்தவும்.
2) வீதியின் இடப்புறத்தை பிரயாணத்தின் போது பாவனை செய்யவும்.
3) சமாந்தரமாகச் செல்லாது ஒன்றின் பின் ஒன்றாகச் சென்று விபத்தினைத் தவிர்க்கவும்.
4) முகப்பு விளக்கு, பிற்பக்க அபாய விளக்கு ஆகியவற்றை முறையாக இரவு நேரங்களில் பாவனை செய்யவும்.
5) போக்குவரத்து நெரிசலினுள் புகுந்து ஓடாதீர்.
6) நிறுத்தி வைத்திருக்கும் வாகனங்களின் கதவு திறக்கப்படும் என்பதை அவதானித்து கடத்தல் வேண்டும்.

### 5.2 தனது வீட்டைச் சுற்றியுள்ள சூழலைப் பற்றிய ஆராய்வு

தனது வீட்டைச் சுற்றியுள்ள ஒரு கிலோ மீற்றர் விட்டத்தினுள் அடங்கும் சூழலைப் பற்றி அறிந்து வைத்திருப்பதுடன், மக்களின் தேவைக்குரிய முக்கிய இடங்களையும் தெரிந்திருத்தல் வேண்டும். இதனை ஓர் மாதிரிப் படம் வரைந்து வைத்திருத்தல் வேண்டும். (உதாரணமாக புகையிரத நிலையம், வைத்தியசாலை, தபாற்கந்தோர், தீயணைக்கும் படை, பொது விளையாட்டு மைதானம், குளிக்கும் இடம், சமூக சேவை நிறுவனங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள், தொழிற்சாலைகள் போன்றவை)

## 06. துணிகரச் செயல்

### ஏழு இரவுப் பாசறை

6.1 7 இரவுகள் குழுவுடன் அல்லது அணியுடன் சேர்ந்து பாசறை வாசம் செய்திருத்தல் வேண்டும். அதில் இரு நாட்கள் தொடர்ச்சியாக பாசறை வாசம் செய்தல் வேண்டும். (வார இறுதி நாட்கள்). இது தொடர்பான அறிக்கை சுய குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்து சாரணத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

## 6.2 நடைப் பயணம்

கால் நடையாக 24 கி. மீ. தூரம் நடைப் பிரயாணம் செய்தல் வேண்டும். இது இரு நாட்கள் கொண்டது. இதன் ஒரு பகுதியை முதல் நாள் செய்து இரவு கூடாரத்தில் தங்கி மறுநாள் மிகுதித் தூரத்தை முடித்தல். இப்பயணத்திற்கு உதவியாக ஒன்று அல்லது இரண்டு சாரணர்களுடன் சேர்ந்து செய்தல் வேண்டும். இப் பிரயாணம் பற்றிய விபரம் தனியாக ஒரு குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட வேண்டும். விபரங்கள் திகதி, நேரம், திசை, அவதானம் என்பவற்றோடு சென்ற பாதையை விளக்கும் வரைபடம் அளவுத் திட்டத்திற்கு அமைய வரைதல் வேண்டும்.

இந்த நடைப்பயணமே மாவட்ட ஆணையாளர் நாடாவிற்குரிய கடைசிப் பரீட்சை ஆகும். விருதிற்கான சகல தகமைகளையும் பூர்த்தி செய்த பின்னர் மாவட்ட ஆணையாளரால் நியமிக்கப்படுபவர் அவரை நடைப்பயணத்திற்கு வழி காட்டுவார்.

# 07. தகுதி காண் சின்னங்கள்

கீழ்க்குறிப்பிடப்பட்ட பகுதிகளில் இருந்து நான்கு தகுதிகாண் சின்னங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7.1 மகிழ்ச்சி மிகு குடும்பம் சின்னம்
7.2 பாசறை கைத்திறன் பகுதியில் களஞ்சியப் பொறுப்பாளர் தவிர்ந்த ஏனைய சின்னங்களில் ஒன்று
7.3 சுகாதார சேவையாளன் அல்லது பொதுச் சுகாதாரம்
7.4 முதலுதவியாளன் அல்லது அம்புலன்ஸ்.

❖ 15 வயதிற்குட்பட்டோர் அல்லது 15 வயதிற்கு மேற்பட்டோர் தமது வயதிற்கு ஏற்ப தமக்குரிய பகுதியில் சின்னங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

❖ மேலும் சாரணன் விரும்பினால் நான்கு தகுதிகாண் சின்னங்களை பெற்றுக் கொள்ளலாம். அவை பின்வருவன அல்லாதவையாக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| VENTURER | - | துணிகரச் செயல் |
| QUARTER MASTER | - | களஞ்சியப் பொறுப்பாளர் |
| FARMER GROUP | - | விவசாயக் குழு |
| SEAMAN GROUP | - | கடல் மனிதன் குழு |
| AIRMAN GROUP | - | வான் மனிதன் குழு |
| EDUCATION GROUP | - | கல்விக் குழு |
| CULTURE GROUP | - | பண்பாட்டுக் குழு |

# 08. சேவை

8.1 சாரணர் விருது பெற்று 9 மாத கால சேவை
8.2 பதிலீட்டுச் சாரணர் விருது மட்டும் பெற்றிருந்தால் 14 வயது முடிந்து 9 மாத கால சேவை

# 09. தகமை

9.1 சாரணர் விருதினைப் பெற்றிருந்தால் 12 வயதின் பின்னரே மாவட்ட ஆணையாளர் நாடாவிற்குரிய செயற்பாடுகளில் தொழிற்படலாம்.
9.2 பதிலீட்டுச் சாரணர் விருது மாத்திரம் பெற்றிருந்தால் 14 வயது முடிந்த பின்னர் தான் மாவட்ட ஆணையாளர் நாடாவிற்குரிய செயற்பாட்டில் தொழிற்படலாம்.
9.3 மாவட்ட ஆணையாளர் நாடா பெறுவதற்கு ஆகக் குறைந்தது 13 வயது நிரம்பியிருத்தல் வேண்டும்.

# மாவட்ட ஆணையாளர் நாடா

சாரணனின் பெயர் : ..............................................................................................

மாவட்டம் : .................................. பதிவு இல : ..........................................

குழு : .................................. பதிவு இல : ..........................................

பிறந்த திகதி : .................................. வயது : ..........................................

சாரணர் விருது / பதிலீட்டுச் சாரணர் விருது : ..........................................

சேவை : .................................. அணி : ..........................................

| | | தேவைகள் | சித்தி பெற்ற திகதி | தலைவர் அ. த. ச. |
|---|---|---|---|---|
| "A" | 01 | சேகரிப்பு | | |
| | 02 | சுய குறிப்புப் புத்தகம் | | |
| | 03 | அணிக் குறிப்புப் புத்தகம் | | |
| "B" | 04 | பொழுதுபோக்கு | | |
| | 05 | கட்டுக்கள் (4) | | |
| | 06 | தீ மூட்டும் முறைகள் | | |
| | 07 | முன்னோடிச் செயற்பாடுகள் | | |
| | 08 | சுவடுகள் | | |
| | 09 | வரைபடம் வரைதல் | | |
| | 10 | மதிப்பிடல் | | |
| | 11 | கைக்கோடரி, கத்தி, வாள். | | |
| | 12 | பறவைகள் | | |
| | 13 | நீந்துதல் | | |
| "D" | 14 | அணிநடை | | |
| | 15 | தொடர்ச்சியான செயற்பாடுகள் | | |
| | 16 | சமூக சுகநலப் பழக்கவழக்கங்கள் | | |
| "E" | 17 | வீதி ஒழுங்கு | | |
| | 18 | வீட்டுச் சூழல் பற்றிய அறிவு | | |
| "F" | 19 | ஏழு இரவு பாசறை வாசம் | | |
| | 20 | கால்நடைப் பயணம் (22 கி.மீ.) | | |

## தகுதி காண் சின்னங்கள்

01. மகிழ்ச்சி மிகு குடும்பம் ..........................................

02. பாசறைத் திறன் ..........................................

03. சுகாதாரச் சேவையாளன் / பொதுச் சுகாதாரம் ..........................................

04. முதலுதவியாளன் / அம்புலன்ஸ் ..........................................

நீச்சல் செய்ய முடியாதவர் பதிவுச் சின்னம் ..........................................

# மாவட்ட ஆணையாளர் நாடா

1 - 20 வரையுள்ள சகல தேவைகளும் திருப்திகரமாக பூரணப்படுத்தியது.

........................ திகதி ........................ தலைவர் அ.த.க. (ஒப்பம்)

நேர்முகப் பரீட்சைக்கு சிபார்சு செய்கின்றேன்.

........................ திகதி ........................ சாரணத் தலைவர் (பெயர் / ஒப்பம்)

பரீட்சகர் குறிப்பு : ..........................................................................................

........................ திகதி ........................ பரீட்சகர் (பெயர் / ஒப்பம்)

நாடா வழங்கியது : ..........................................................................................

........................ திகதி ........................ (பெயர் / ஒப்பம்)

# வாழ்த்துகின்றோம்

## வைரவிழாக் காணும் எமது கல்லூரிச் சாரணர்களின் சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

- உயர்தர மாணவர் மன்றம்
- வணிக மாணவர் மன்றம்
- இன்ரறக்ட் கழகம்
- விஞ்ஞான கணித மன்றம்
- தமிழ் மன்றம்
- சமூகவியல் மன்றம்
- ஆங்கில மன்றம்
- இந்து மன்றம்
- கிறீஸ்தவ மன்றம்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

✳ ஸ்பெஷல் ஐஸ்கிறீம் ✳

சொக்லெட் ஐஸ்கிறீம்

ஜெலி ஐஸ்கிறீம்

வெனிலா ஐஸ்கிறீம்

நட்ஸ் ஐஸ்கிறீம்

புருட்சலட் ஐஸ்கிறீம்

மற்றும்


மட்டன் றோல்

மிக்ஸர்

கேக் வகைகள்

லட்டு

ஸ்பெஷல் பீடா



இன்னும் பலவகையான பிஸ்கட், ரொபி வகைகளைப் பெற்றிட

**யாழ். நகரில் தன்னிகரில்லா ஸ்தாபனம்**

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நன்றிகள்

எமது வைர விழா மலருக்கு வாழ்த்துச் செய்திகளை தந்து உதவியவர்களுக்கும், ஆக்கங்கள் தந்துதவிய ஆசிரியர்கள், சாரணர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும், விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகர்களுக்கும், எமக்கு பல்வேறு வழிகளில் உதவிய காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளையினருக்கும், இவ்விழாவில் கலந்து சிறப்பித்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சாரணர்கள், இந்நூலின் முதற்பிரதியை பெற்றுக் கொண்ட மதிப்புக்குரியவருக்கும், இந்நூலைப் பெற்று உதவியவர்களுக்கும், இந்நூலை சிறப்புற வெளிக்கொணர்வதற்கு ஆக்கமும், ஆலோசனைகளும் வழங்கிய அதிபர், மற்றும் வைரவிழா குழுவினர்க்கும், இம்மலரை சிறப்புற அச்சிட்டு உதவிய அச்சகத்தார்க்கும் எமது நன்றிகள்.

திரு வ. முருகதாஸ்
*வைரவிழாச் செயலாளர்*

ஐஸ்கிறீம் பிரியர்களே!    குளிர்பானப் பிரியர்களே!

உங்கள் தேவையறிந்து அழைக்கிறார்கள்

**★ லிங்கன் கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தார் ★**

மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட

- ★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம் ★
- ★ சொக்லெட் ஐஸ்கிறீம்
- ★ புருட்சலட் ஐஸ்கிறீம்
- ★ வெனிலா ஐஸ்கிறீம்
- ★ ஜெலி ஐஸ்கிறீம்
- ★ நட்ஸ் ஐஸ்கிறீம்

மற்றும் உங்கள் வாய்க்கு ருசியாக,

மிக்ஸர்    மட்டன்றோல்    லட்டு
மஸ்கட்    ஸ்பெஷல் பீடா

முதலியவற்றையும் பெற்றிட

**யாழ். நகரில் தன்னிகரில்லா ஸ்தாபனம்**

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி,    யாழ்ப்பாணம்.

Cover Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13